# தென்மொழி



உலக முதற் புலவர்
திருவள்ளுவர்
ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்
1·25
சுவடி - 20; ஓலை - 12 — விலை ஓர் உருபா
குறள் பாடி நட.

# நமக்கு வந்த மடல்கள்.

0: 1024 : தென்மொழி சு. 20, ஒலை. 11 ஆசிரியவுரை, 'சிற்றினத்' தலைவர்களுக்கும், மானமுணராத் தலைவர்களுக்கும் நல்ல நெறியுரை. நன்றி.

கோ. உள்ஒளி. அறி.இ;ச.இ.
வழக்கறிஞர். திருப்பத்தூர். வ.ஆ.

0: 1025 : அன்புள்ளம் கொண்ட மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு மிகுந்த வணக்கத்துடன் எழுதிக் கொண்டது.

'இவை தமிழல்ல' மதிப்புரை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. சொல்லாய்வு அறிஞர் அருளி அவர்களின் சொல்லாய்வு உரை கேட்டவர்கள், தங்களின் மதிப்புரையை ஏற்றுக் கொள்வர். அருளியாரின் அறிவுத்திறனைப் புரிந்துகொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விரும்பாதவர்கள் தங்களின் மேல் உள்ள காழ்ப்புணர்வுடன் தகாதவை கூறுவர். அதைப்பற்றி நாம் பொருட்படுத்த வேண்டாம். ஆனால், மொழிஞாயிறு பாவாணரைப் பற்றிக் குறிப்பிடும் நேரத்தில், அவ்வளவு கடுமையாக அக்குறைகளைச் சுட்டுவது சரியானதுதானா என்று மறு ஆய்வு செய்யும்படி வேண்டுகின்றேன். பாவாணரின் குறைகளைத் தாங்கள் குறிப்பிடாமல் இருப்பது அருளியாரின் ஆய்வை மற்றவர்கள் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் தங்களின் மேன்மையான தொண்டை மறுக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் வழி வகுக்கும் என்பது எமது எண்ணம். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்பதற்கு ஏற்ப பாவாணரால் நம் மொழி, இனம் பெற்ற மிகையான நன்மையைக் கருதி மற்றவற்றை மறக்கும்படி தாழ்மையோடு வேண்டுகிறேன்.

தங்கள் தொண்டன்
— தென்மொழி ச. சின்னத்துரை, நெய்வேலி-3

0: 1026 : அன்புடைய, பாவலரேறு ஐயா!

வணக்கம். கடந்த இருபதாண்டுகளுக்கு, மேலாகத் தென்மொழியையும், தொடக்கநாள் தொட்டுத் 'தமிழ்ச்சிட்டு' 'தமிழ்நிலத்'தையும் பெற்றுப் பயன்பெறும் யான் தங்கள் குறளுரைகளுக்குப் பழம்பெருமை நிலைநாட்டவும், சிதைந்த தமிழ்மொழியைக் காக்கவும், அழிந்துவரும் தமிழினத்தைக் காக்கவும், உறுதுணையாக நிற்கும் பொருட்டு, அவற்றைத் தருவிக்கின்றேன். பொருள் நிலையாலும் தொண்டு நிலையாலும் சிறிது காலங்கடந்து உதவியுடன் பங்குபெறுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணிந்து தொடர்க, உங்கள் சீரிய தொண்டு! வெல்க உங்கள் கொள்கை!

— மு. தமிழ்நெஞ்சன், இடங்கண்ணி

0: 1027 : அன்பார்ந்த ஐயா! உங்கள் சிந்தனை ஊற்றுகள் இந்தத் தமிழ்நாட்டிற்கு விடிவெள்ளியாகத் திகழும்! உங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கம் நான் தங்களைக் காணத் துடிக்கிறேன். இவண் தங்கள் மாணவன்.

— இரா. இராமலிங்கம், அமரர்பூண்டி

0: 1028 : அய்யா அவர்கட்கு வணக்கம்.

நெடுங்காலத்திற்குப்பின் சுவடி 20 ஒலை இதழில் தென்மொழி, ஆற்றல் மிக்க முறையில் ஆசிரியவுரை ஒன்றைப் படைத்திருப்பது கண்டு பேருவகை கொள்கிறோம்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]



தென்மொழி
மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

---

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன் தென்மொழி நா. இளமாறன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:20] உ௦கரு கன்னி [ செப் அக் - 84'] [ஓலை - 12

# இந்துமதம், இந்தி, இந்தியா, இந்திரா!



'வர வர மாமியார் கழுதை போல் ஆனாள்' என்னும் ஒரு பழமொழி உண்டு. இந்தியாவின் தலைமையமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் திருவாட்டி இந்திரா காந்தி அம்மையாரின் நடவடிக்கையில் இந்தப் பழமொழி மிகவும் நன்றாகப் பொருந்துகிறது. அவரின் அண்மைக்கால செயற்பாடுகளில் அவரின் உண்மை உருவம் நன்றாக வெளிப்பட்டிருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். தமக்குப் பிடிக்காத மாநில முதலமைச்சர்களை அப்புறப்படுத்துதல், எதிர்க்கட்சிகளுக்கு ஊக்கமளித்து, மறைமுக ஆதரவு காட்டி, மாநில அமைச்சரவைகளைச் சீர்குலைத்தல், எவ்வளவு பெரிய அரசியல் அறிஞர்களாயினும் (தேசாய், சந்திரசேகர், வாச்பாயி

சரண்சிங், செகசீவன்ராம், முதலியோர்) தம்மொடு ஒத்துப் போகாதவரைத் தனிப்படுத்தி அழித்தல், முதலிய அரசியல் நடவடிக்கைகளுடன், மக்களிடம் தமக்கு நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவு தேடித் தமக்குள்ள சாய்காலைப் பெருக்கிக் கொள்ளுதல், தேசிய ஒருமைப்பாடு, இந்திய ஒற்றுமை என்னும் பெயரால் தேவையற்ற இந்துமத உணர்வுகளைப் பரப்புதல், இந்தி மொழியை மீண்டும் பரவலாக்குவதற்கான முயற்சிகளில் துணிந்து ஈடுபடுதல் போன்ற குமுகாய நடவடிக்கைகளையும் அவர் மிகவும் தந்திரமாகச் செயல் படுத்தி வருகிறார்.

இந்திய நாட்டுப் பொதுமக்களும் குறிப்பாக இளைஞர்களும் அரசியல் அறிவு பெறமுடியாத வண்ணம், அவர்களின் மனங்களை விளையாட்டுப் போட்டிகளிலும், தேவையற்ற மதவிழாக்களிலும், திரைப்படப் பொழுது போக்குகளிலும் திசை திரும்புமாறு, அத்தகைய செயல்களுக்கு அளவிறந்து ஊக்கமளிக்கும் போக்கு அண்மைக் காலங்களில் மிகுதியாக ஏற்பட்டு வருகிறது. இதை இந்திரா காந்தியே திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகிறார். தம் கருத்துகளும், உருவமும் மக்களிடையே நன்கு விளம்பரமாகும் படி, வானொலிப் பரப்புதல்களை நேரம் மிகுவித்தும், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைக் கூடுதலாக்கியும் மிகத் தந்திரமாகச் செயற்பட்டு வருகிறார். தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் மள மளவென்று பெரும் பெரும் ஊர்களிலெல்லாம் அமைக்கப் பெற்றும் விரிவாக்கப் பெற்றும் வருவதை மக்கள் உணர்வர். இந்த நிலைகளெல்லாம் அவரின் மக்கள் சாய்காலை மிகுதிப் படுத்திக் கொள்ளும் முயற்சிகளே! பொது மக்களின் நன்மை கருதியே இத்தகைய செயற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதெல்லாம் ஒரு போலியான விளம்பரமே!

இந்து மதம் கடந்த காலங்களில் மக்களிடையில் எவ்வளவு முன்னேற்றத் தடையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைச் சிறிதே வரலாற்றறிவும் நடுநிலையுமுள்ள எவரும் தெளிவாக உணர்வர். அம்மதத்திற்கே வலிவான அடித்தளங்களாக அமைந்துள்ள புராணங்கள், இதிகாசங்கள் முதலிய மூடநம்பிக்கைகள் மிகுந்தும் உள்ள கதைகள் யாவும் பல கோணங்களில் எழுதப் பெறுவதும், நாட்டியம், நாடகம், இசை என்னும் கலைகளில் அவை ஊடுருவி அளாவி நிற்கும் நிகழ்ச்சிகளை, வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றுள் அளவிறந்து புகுத்திப் பொது மக்களின் மனங்களை அவை தம்வயப்படுத்திக் கொள்ளும்படி செய்வதும், அவர்களின் சிந்தனைகளை நாட்டில் நடைபெறும் அரசியல், பொருளியல் வீழ்ச்சிகளிலும், சூழ்ச்சிகளிலும் ஈடுபடாதபடி திசை திருப்பம் பண்ணுவதும், கூர்ந்து நோக்கும் திறனுள்ள நாட்டுநலன் கருதும் நல்லவர்களுக்கு விளங்காமற் போகா.

முன்னைவிட, இந்து மத விழாக்களுக்கு இப்பொழுது பெரிதும் விளம்பரங்கள் அளவிறந்து கொடுக்கப் பெறுகின்றன. விநாயக சதுர்த்தி, இராம நவமி, கிருட்டிண செயந்தி, விசயதசமி போலும்

கடவுளர் விழாக்கள் முன்பு அவ்வளவாகக் கொண்டாடப் பெற்றதில்லை. இக்கால் அவற்றிற்குத் தேசிய மதிப்புக் கொடுக்கப் பெறுவதும், வானொலி, தொலைக்காட்சிகளில் அவற்றின் நேர்முக வண்ணனைகளும், காட்சிகளும் இடம் பெறுவதும் கொடுமையிலும் கொடுமை! ஒருபுறம் அறிவியல் வளர்ச்சியிலும், விண்வெளி ஆராய்ச்சியிலும் ஊக்கமும் ஆக்கமும் காட்டுவதாகக் கூறி விளம்பரப் படுத்திக் கொண்டு, மக்களின் அறிவு வளர்ச்சியில் தமக்கு ஏதோ அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் இந்திரா அரசு, மறுபுறம் இது போலும் மூடநம்பிக்கைகளும் அறியாமையும் நிறைந்து, மக்களை முன்னேற்றப் பாதையிலிருந்து அடியகற்றும் இந்துமதக் கூத்தாட்டங்களுக்குப் பெரிதும் துணை போவதும் ஊக்கமளிப்பதும் எத்துணைத் தந்திரமான அரசியல் சூழ்ச்சி என்பதை ஏழைப் பொதுமக்கள் அறவே உணர்ந்து கொள்ளல் இயலாது.

இந்திராவின் ஆரியத்தனமான அரசியல் சூழ்ச்சிகளுக்குப் பெரிதும் கைகொடுத்து உதவும் கருவியாக இந்து மதம் இக்கால் வலிவு படுத்தப்பட்டு வருகிறது. மக்களை மூடநம்பிக்கைகளில் ஆழ்த்தினால்தான், தம் அரசியல் சூழ்ச்சிகளை அவர்கள் உணர முடியாது என்பது இந்திராவின் சாணக்கியக் கொள்கை. இந்தக் கொள்கையையும், இந்திமொழியையும் கருவிகளாக வைத்தே, தேசிய ஒருமைப்பாட்டை நன்கு வேர் ஊன்ற வைத்து விட முடியும் என்று தவறாகக் கணக்குப் போடுகிறார், இந்திரா!

அண்மையில் அவர், இந்தியில் உருவாக்கப் பெற்ற ஓர் அறிவியல் அகராதியைப் புதுதில்லியில் வெளியிட்டுப் பேசுகையில், இந்திமேல் கொண்ட அவரின் தணியாத பற்று நன்கு வெளிப்பட்டு இருக்கிறது. "நாட்டில் ஒருமைப்பாட்டை வலுப்படுத்த இந்தியை இணைப்பு மொழியாக ஏற்பது இன்றியமையாதது. இந்திமொழியைக் கற்பதில் நாடு முழுவதிலுமுள்ள மக்கள் அனைவரும் ஆர்வம் உள்ளவர்களாக உள்ளார்கள். ஆனால் அரசியல் ஊதியத்துக்காக, இதைத் தடுக்க தென் மாநிலங்களில் உள்ள சிலர் முயல்கின்றனர்" என்று இந்திரா காந்தி கூறியுள்ளார். அவர் தென்மாநிலங்கள் என்று கூறியிருந்தாலும், தமிழகத்தையே அவ்வாறு குறிப்பிடுகிறார் என்று கொள்ள வேண்டும். ஏனெனில், வேறு தென்மாநிலங்கள் எதிலும் இந்தியை ஏற்றுக்கொள்ள எவரும் தயங்கியதில்லை. அங்கெல்லாம் மும்மொழித் திட்டமே நடைமுறையில் உள்ளது.

எனவே, இந்தக் கூற்றில் அவரின் இரண்டு உள் நோக்கங்கள் தெளிவாகப் புரிகின்றன. ஒன்று, இந்தி மொழியை எப்படியாவது முழுமையாக இணைப்பு மொழி ஆக்கி விடுவது. இரண்டு, இதற்குத் தடையாக உள்ள தமிழகத்தை எவ்வாறேனும் முறியடிப்பது; அல்லது கீழ்ப்படியச் செய்வது. முன்பெல்லாம் 'இந்தியைத் தெற்கே உள்ளவர்கள், தாமே விரும்பி ஏற்றுக் கொள்ளும் வரை, ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்கும்' என்னும் தம் தந்தை நேரு கொடுத்த உறுதி மொழி என்றும் மீறப்படாது என்று கூறி

வத்தவர், இக்கால், அதன் பரவுதலை மிகவும் வலியுறுத்திப் பேசு வதும், அவரின் பேச்சுக்கு இலயப, இந்திமொழி ஆணைக்குழு, அதன் பலவகையான செயற்பாட்டை வலியுறுத்திச் செயல்கள் ஆற்றிக் கொண்டு வருவதும், இந்திமொழி இந்தியாவின் முழுமை யான இணைப்பு மொழியாக விரைவில் ஆக்கப்பட்டு விடும் என்பதை மேன்மேலும் உறுதிப்படுத்துகின்றன.

எப்படியோ, இந்துமதத்தையும் இந்தியையும் பயன்படுத்தி, இந்தியாவை இந்திராவின் வல்லதிகாரத்துக்கே கொண்டு வந்து விட வேண்டும் என்பது அவரின் தனியாய நோக்கம் என்பது வலுப்பட்டு வருகிறது. இந்தியாதான் இந்திரா, இந்திராதான் இந்தியா என்பதே, இந்திராவின் அரசியல் கொள்கை! பொருளியல் கொள்கை! குமுகாயக் கொள்கை! மதக்கொள்கை! மொழிக்கொள்கை என்று ஆகி விட்டது! அதை நிறைவேற்றிக் கொள்ள தமக்குண்டான பலவழிகளிலும் இந்திராகாந்தி முயன்று வருகிறார். அவ்வாறு முயல்கின்ற வகைக்கு மக்கள் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவே, இந்துமதத்தையும், இந்தியை யும் அவர் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கிறார். தேசிய ஒருமைப்பாடு என்னும் வண்ணக் குடை பிடிக்கிறார்; மதவிழாக் களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிறார்; மக்களை மூடநம்பிக்கைகளில் ஆழ்த்த முனைந்து நிற்கிறார். இந்திமொழி வெறியர்களுக்குச் 'சூ' காட்டுகிறார்.

இனி, இன்னொன்றையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந்துமதத்தை மக்களின் அறிவு மழுக்கக் கருவியாகவும், இந்தியை உணர்வு மழுக்கக் கருவியாகவும் பயன்படுத்தி வரும் இந்திரா காந்தி, அளவிறந்த பணக் கவர்ச்சியால்வேறு மக்களைத் தம்வயப் படுத்தப் பார்க்கிறார். குறிப்பாகத் தம்மை அஃதாவது தம் கட்சியை வரவேற்காத மாநிலங்களில் உள்ள மக்களைத் தம் பண வலிவால் இழுத்துத் தமக்கு ஆதரவு சேர்த்துவிட வேண்டும் என்று முயற்சி செய்கிறார். எடுத்துக் காட்டாகப் புதுவையில் தமக்கு மக்கள் ஆதரவாக இல்லை என்பதாலேயே, குடியரசுத்தலைவர் ஆட்சியை இன்னும் அங்கு வைத்திருக்கும் அதே வேளையில், அங்குள்ள மக்களைத் தமக்கு ஆதரவாகத் தம் கட்சியில் சேர்க்கும் முயற்சியை மிகவும் விரைவாகவும் முடுக்கமாகவும் செய்து வருகிறார். அண்மையில் புதுச்சேரியில் நடந்த அரசியல் குத்து வெட்டுகளுக்கு அதுவே காரணம் என்றும், அங்கு இந்திராப் பேராயத்தில் (கட்சியில் மட்டுமே) சேர்பவர்களுக்கு உரு. 5000 (கவனிக்கவும், ஓர் உறுப்பினர் கட்சியில் சேர உருபா ஐயாயிரம்) வரை தரப்படுகிறது என்றும் பரவலாகப்பேசப்பெறுகின்றன. அங்கு உள்ளூரில் உள்ள இந்திராப் பேராயக் குட்டி அரசியல் தலைவர்கள், அக்கட்சியில் சேரும் வேண்டுகைப் (விண்ணப்பப்) படிவத்தை மட்டும் ஒன்று 100 உருபா விலைக்கு விற்கிறார்களாம்! எப்படி இருக்கிறது இந்திராவின் அரசியல் சாணக்கியம்.


இப்படி சாமம், (அமைவாகப் பேசி உடன்பாட்டுக்குக் கொணர்வது), பேதம் (எதிர்க்கட்சியில் உள்ள மக்களை வேறு

பிரிப்பது), தானம், (உறுப்பினர்களுக்குக் கொடை தருவது), தண்டம் (முடியா விட்டால் படைத் துறையையும் காவலர்களையும் விட்டுக் கொடுமைப் படுத்தச் செய்வது) ஆகிய நான்கு அரசியல் தந்திரங்களைக் கொண்டும் இந்திரா ஆட்சிநடத்தி வருவது இந்தியக் குடியரசக் கொள்கையையே குழிதோண்டிப் புதைப்பதாகும்.

இந்த இடத்தில், பொதுவாக மக்கள், சிறப்பாகத் திராவிடர், குறிப்பாகத் தமிழர் — ஒன்றை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும்! இந்திரா என்றால் இந்தியா — என்னும் பொருள் எவ்வாறு அரசியல் கொடுமை வாய்ந்ததோ, அதை விடக் கொடுமை வாய்ந்தது இந்திரா என்றால் ஆரியம் – பார்ப்பனியம் - பார்ப்பனிய முதலாளியம், (Baniya - Brahminism) - என்னும் பொருள்! அந்தத் தற்காலிகப் பொருள், நிலையான பொருளாகி விடாமல் பார்த்துக் கொள்வது நம்முடைய கடமை! நம்மவர் கடமை என்று உணர்ந்து கொள்க!

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். (558)

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. (570)



# உலக அரங்கில் நம் உயர் நூல்கள்.

பண்டை நாடுகளின் வரலாறுகளும், மாந்த இயல் சான்றுகளும், தொல்காப்பியக் கல்வியில் பல புதிய பார்வையை நல்கி உள்ளன. அவற்றைக் காணுவதுடன், தொல்காப்பியம் தன் செய்தி அடக்கத்தாலும், தொன்மையாலும் உலகநூல் ஆகும் மாண்பையும் உணரலாம். தொல் காப்பியம் திருக்குறள் போன்ற பெறற்கரிய பெரிய நூல்கள் தமிழில் எழுதப்பட்ட ஒரு "பாவ"த் தாலும், தமிழன் என்ற ஒடுக்கப்பட்ட இனத்தில் பிறந்து விட்ட பிறிதொரு "பாவ"த்தாலும் குடத்துள் விளக்காக உலக அரங்கில் ஒளி பரப்ப இயலாமல் கிடக்கின்றன. பாணினியும், கீதை கிருட்டிணனும் உலக அரங்கில் இடம் பெற்ற அளவிற்கு, அவர்களைச் சற்றும் தாழாத, ஆனால் உயர்ந்த தொல்காப்பியரும், திருவள்ளுவரும் இடம் பெறாமல் போனதேன்? தமிழர் எண்ணுக!

—பர். கு. பா அறவாணன் 'அற்றைநாள் காதலும் வீரமும்' என்னும் நூலிலிருந்தது.

அட்டைப்பட விளக்கம்.

# ஏரல், கொற்கைத் தமிழ் மன்றத்தின் எடுப்பான தமிழ்த் தொண்டு!

---

இவ்விதழ் அட்டைப் படத்தை அணி செய்வது, நெல்லை மாவட்டம் ஏரல், கொற்கைத் தமிழ் மன்றம், அதன் ஏழாம் ஆண்டுத் தமிழ்த் தொண்டின், நறுநினைவாக அவ்வூரில் நாட்டியுள்ள, திருவள்ளுவப் பெருமானின் எழிலொழுகும் திருவுருவச் சிலை!

இச் சிலைதிறப்பு விழா நிகழ்ச்சி, கடந்த 11-8-84-ஆம் நாள், மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இவ்விழா முழு நிறைவுடன் நடைபெற வேண்டும் என்ற நன்னோக்குடன், அம்மன்றத் தலைவர் பெரும்புலவர், தமிழ்த்திரு, ச. சிவசங்கு அவர்களும், அதன் செயலாளர், தமிழ்த்திரு. க. ஐயாத்துரை அவர்களும் தம் மன, மொழி, மெய்களால் எடுத்துக் கொண்ட முயற்சிகள், அளவிறந்தன. அவை பற்றிக் கேட்ட. கண்ட தமிழன்பர்கள் அனைவரையும் அவர்தம் வினைப்பாங்கு பெருமகிழ்விலும், பெருவியப்பிலும் ஆழ்த்தி, அவர்களின் தண்டமிழ்ப் பற்றை, எண்ணிப் பெருமிதம் உறச் செய்தது எனில் வேறு விளக்கமும் வேண்டுமோ? விழா நாள்கள் முடியும் வரையும், ஏன் முடிந்த சில நாள்கள் வரையும் கூட, மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது கருமமே கண்ணாக அவர்கள் ஆற்றிய பெரும்பணி, இவ் வெற்றித் திருவிழாவின் முடிவில், திருவள்ளுவமாய்க் கனிந்து, தெய்வத்திருவுருவாய்க் கால்கொண்டு, அங்கு வந்திருந்த அனைவரையுமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது என்றால், அவர்கள்-தாம் பெற்ற பேருவகைக்கு அளவேது?

இவ் விழாவிற்கு, சென்னை, இலயோலாக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், பேரறிஞரும் ஆகிய பர். க. அறவாணன் அவர்கள் தலைமைபேற்றதும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் திருவள்ளுவப் பேராசான் திருவுருவத்தைத் திரை நீக்கம் செய்ததும், விழாவுக்கே திருமுடி மணியொளி போல் சுடர்விசிச் பெருமை சேர்த்தன.

ஏரல், கொற்கைத் தமிழ் மன்றம், இத் தூயதமிழ்த் திருவிழாவால் ஏய நறும் புகழ் நிறுத்தது. என்றென்றும் அருளொளி வீசி அறிவுச் சுடர் மின்னும், அத் திருவள்ளுவப் பேராசான் சிலை, தமிழ் உலகுக்கே நல்வழி காட்டி, நல்வாழ்த்து வழங்கட்டும் என்று தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் விழாவெடுத்த பெருமக்களை வாழ்த்தி வணங்குகிறது.

(பிற அனைத்துச் செய்திகளையும் தமிழ்நிலம் இதழெண், 45. இல் பார்த்து நிறைவு பெறுக.)

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

0: 1033 : அன்பிற்குரிய அய்யா,

வணக்கம். தங்களது 'தென்மொழி'யில் (சுவடி 20, ஓலை 11) எழுதப்பட்ட 'உண்மை இதழுக்கு இரண்டு திறந்த மடல்கள்' குறித்து இக் கடிதம் எழுதப்படுகின்றது.

'உண்மை' ஆசிரியர் 1-6-84 இதழ் உண்மையில் வெளியிட்ட கருத்தினை ஒட்டியும், 1-8-84 இதழில் வெளியிட்ட செய்தியினை ஒட்டியும் மடல்கள் எழுதப்பட்டுள்ளன. அண்மைக் காலமாகத் தென்மொழி, தமிழ்நிலம் போன்ற இதழ்கள் திராவிடர் கழகத்தினையும், ஆசிரியர் மானமிகு கி வீரமணி அவர்களைப்பற்றியும் பார்ப்பன ஏடுகள் எழுதுகின்ற வகையில் எழுதிவருகின்றது. 'தனித்தமிழ்' தேவையா இல்லையா என்ற கருத்திற்கு 'உண்மை' ஆசிரியர் 15-7-84 முதல் கடைசிப் பக்கத்தில் சில கருத்துகளை வெளியிட்டிருப்பதனைத் தங்களுக்கு மடல் எழுதியவர்கள் கவனிக்கத் தவறியது ஏனோ? 15-7-84 இதழில் எழுதப்பட்ட தனித்தமிழ் குறித்த ஆசிரியரின் கருத்தினைத் 'தென்மொழி'த் தோழர்கள் ஆய்விற்கு எடுத்துக் கொண்டு விடை கொடுத்திருக்கலாம். ஆனால் 'உண்மை'இதழே 'பெரியாரின்' கொள்கைக்குப் புறம்பாகச் செல்வதாகவும், திராவிடர் கழகமும் அதனை ஆதரிப்பதுபோலும் மடல்கள் அமையப்பெற்று அவை 'தென்மொழியில் வருவதென்றால் என்ன காரணம் என்று விளங்கவில்லை. 15-7-84 உண்மையில் 'தனித்தமிழ்' குறித்த கருத்தை முடிவு செய்து கீழ்க்காணுமாறு முடிக்கின்றார் :

'தோழர்களே! 'உண்மையின்' உயிர்க் கொள்கையில் தமிழும் ஒன்று; தமிழே அல்ல! கடவுளை மற' மனிதனை நினை என்பதில் — மனிதன்தான் நமது அடிப்படை. மனிதனை விட்டு விலகி— நாம் எத்துணைத் தத்துவம் பேசினாலும் பயனில்லை, சராசரித் தமிழனைத் தனித்தமிழின் பக்கம் நிச்சயமாக அழைக்க முயற்சிப் போம். ஆனால் அவனை ஒதுக்கி விட்டு நாம் தமிழின் பக்கம் போவது நிச்சயமாக நடக்க வேண்டாதது!' இவ்வாறு எழுதப்பட்டிருப்பதில் ஆசிரியர் அவர்கள் மானமிகு கி. வீரமணி கூறியதனைத் 'தனித்தமிழின் பக்கம் அழைக்க முயற்சிப்போம்' என்று எழுதியிருப்பதனையும், நடக்க வேண்டிய தனைச் சுட்டிக் காட்டியிருப்பதனையும் உண்மையில் ஆசிரியர் தெளிவாக்கியுள்ளார். ஆனால் உண்மைக்கு எழுதப்பட்ட மடல்கள் தமிழ்மொழியைப் புறக்கணிப்பது போலவும், தமிழுக்கு இரண்டகம் (துரோகம்) செய்வதுபோலவும், நடைபெற்ற போராட்டங்கள் எல்லாம் அதனடிப்படையில் நடந்தன என்பதனைச் சுட்டிக் காட்டி எழுதுவதும் மிக வேடிக்கையான ஒன்றாக உள்ளது. உண்மை இதழ் தனித்தமிழை நோக்கிச் செல்ல 'மடல்கள்' கருத்தாய்வு அரங்கில் செல்வதனை யாரும் ஒருபோதும் குற்றம் காண முயலார். ஆனால் எழுதப்பட்ட மடல்கள் வேறு திசைகளில் செல்வதும், ஒரு மடலில் மதிப்பின்றி ஒருமையில் 'நீர்' போட்டு எழுதுவதும் 'தென்மொழி'யின் தரத்திற்கு உகந்தது அன்று. தந்தை பெரியார் அவர்கள் தமிழைப்பற்றிக் கூறியதனை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்

# பாவலரேறு பற்றிய ஆய்வரங்கம்!

கடந்த 20-9-84 (வியாழன்) அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்த்துறைப் பிரிவில் அரசர் முத்தையா ஆய்வரங் கத்தின் சார்பில், 'பாவலரேறு' பெருஞ்சித்திரனாரின் தமிழ்த் தொண்டு' என்ற தலைப்பில் ஆய்வரங்கம் ஒன்று நடைபெற்றது.

தமிழ்த்துறை நூலகத்தில் மாலை 3 மணியளவில் இவ் வாய் வரங்கு, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர், கலைமாமணி பர். ஆறு. அழகப்பனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது தலைமையுரையில், பாவலரேறுவின் மாண்புகள் பலவற்றையும் தொகுத்துரைத்தார். பாவலரேறுவின் தனித்தமிழ் இயக்கத் தொண்டுகளையும், எவருக்கும் அஞ்சாமல் கருத்துகளை எடுத்துரைக்கும் பாங்கினையும் விளக்கினார். தென்மொழி, தமிழ்ச் சிட்டு இதழ்கள் புரியும் தமிழ்ப் பணிகளை விரிவாகக் குறிப் பிட்டார். இறுதியில் பாவலரேறுவின் நாணல் தன்மையற்ற வாழ்வு ஈ.வே.இரா. பெரியாரை ஒத்திருக்கிறது என்று பாராட்டினார்

பாவலரேறுவின் பாடல்களை முனைவர் (டாக்டர்) பட்டத்திற் காக ஆய்வு செய்யும் ஆராய்ச்சியாளர் திரு பர். உதயசூரியன் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த் தொண்டுகளை,

1. தமிழின் மீது பிறமொழி மேலாண்மை எதிர்ப்பு
2. தமிழில் பிறமொழிச் சொற்கள் கலத்தல் எதிர்ப்பு.
3. தனித்தமிழ் பரவுதலுக்குரிய ஆக்கப் பணிகள்

— என்ற மூன்று பாகுபாடுகளில் கட்டுரை அமைத்து விளக்கினார்

இவ் வாய்வுக் கட்டுரையில் தனித்தமிழ் இயக்கத்தின் மூன்றாம் தலைமுறையினராய் நின்று, தமிழ்ப்பணிதான் தம் வாழ்வு என்று வாழ்ந்து வரும் பாவலரேறுவின தமிழ்த் தொண்டுகளைச் சான்று களுடன் விளக்கினார். பாவலரேறுவின தமிழ்ப் பணிகளுக்குத் துணைநிற்க வேண்டியது, தமிழ் உணர்வு படைத்தோரின் கடமை என்பதை இறுதியில் வலியுறுத்தினார்.

ஆய்வரங்க நிறைவில், ஆய்வரங்கத்தின் அமைப்பாளர் தமிழ் விரிவுரையாளர் திரு.ப. தங்கராசு அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

எழுதிய தோழர், பெரியார் அவர்களின் இன்னும் பல கருத்துகளை மொழியைப்பற்றிப் பேசியதனை படித்திருந்தால், பெரியாருடைய கருத்துகளையே திறனாய்வு (விமர்சனம்) செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார். எனவே திராவிடர் கழகத்தினை எப்படி ஆய்வு செய்ய வேண்டுமோ அப்படி ஆய்வு செய்யுங்கள். பார்ப்பனத் தாள்கள் எழுதுவதுபோல் நாங்களும் எழுதுவதற்கு ஊக்கப்படுத்தப்பட்டால் இழப்பு 'தென்மொழி'க் குத்தான். வேறு எவருக்குமில்லை.

எனவே மொழியைக் காக்க நமக்குள்ளே மொழிச் சண்டை வேண்டாம். களத்தில் இறங்குங்கள்! நாங்கள் துணைக்கு வருகின்றோம். — இலால்குடி, க. நாகராசன், திருச்சி-13.

# தமிழினம்

## தாழ்ச்சியும் வீழ்ச்சியும் மீட்சியும்

— இரணியன் —

* உ.த.மு.க கொள்கை உரவோர்
முதலாவது பயிற்சி வகுப்புத் தொடரில் ஆற்றிய உரை *

தமிழைக் காட்டு விலங்காண்டி மொழி என்று பெரியார் கூறினார்! இதைக் கேட்டுச் சீறி எழுந்தோர் பலர்! ஆனால், இதற்குரிய பொருள் என்னவென்று பார்த்தால் - நேரடியான பொருள் கொண்டால், தமிழைக் 'காட்டு விலங்காண்டிகளின் மொழி'' என்றுதான் பெரியார் கூறியிருக்கிறார் என்பது புலனாகும்!

'தமிழரா காட்டு விலங்காண்டிகள்? உலகிற்கே நாகரிகத்தைக் கற்பித்த தமிழரா பண்படாக் காட்டுமக்கள்?'' என்று பலர் சினந்து போயக் கேட்கலாம்! அதற்கு நாம் கூறுகின்ற விடை ''ஆம்'' என்பதே! வெளி உலகின் முன், நம்மை அறியாத மக்களினங்களின் முன் நம் சிறப்புகளை மட்டுமே இயம்பத்தக்க வகையில் எதையும் கூறலாம்! ஒரு வகையில் அது தேவையானதும் கூட!

ஆனால், நமக்குள்ளும், 'ஒரு சிலவாக'' உள்ள அந்தப் பெருமைகளையே பேசியிருப்போமாயின, அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகவும், நமது வீழ்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொள்வதாகவுமே முடியும்! எனவேதான, நம்மைப் பற்றிய வெளிப்படையான மதிப்பீட்டை நமக்கு முன் நாம் வைத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்!

**இரண்டு தன்மைகள்-நாகரிகமும் அநாகரீகமும் :**

ஆற்றல்கள் அனைத்திலும் நேர்க்கூறும் எதிர்க்கூறும் இணைந்திருப்பது போல், மக்களின வளர்ச்சிப்பாங்கிலும், மக்கள் வாழ்வியல் பாங்கிலும் அவர்தம் உயர்வுதாழ்வு அனைத்திலும் இந்த இரண்டு கூறுகளும் இணைந்தே இருக்கும்!

எனவேதான், தொல்பழங்காலத்திலேயே நாகரிகத்தின் உச்சியில் ஏறிய இனங்களிடையும், பண்பாட்டின் அடித்தளங்களைக் கண்டுவிட்ட மக்கட் குழாங்களிடையும், அறவெறுக்கத்தக்க பல அநாகரிகத் தன்மைகள், காட்டு விலங்காண்டிகளும் அறிந்திராத விலங்காண்டிப் பண்புக்கூறுகள் இருந்து வந்தமையை வரலாற்றால் அறிகிறோம்! அவற்றின் எச்சங்கள் இன்றும் ஓரளவு உயிர்வாழ்ந்து கொண்டு, மாந்த நேயத்திற்கும் மக்கள் ஒற்றுமைக்கும் மாபெரும் அறைகூவலாக இருந்துவருவதைத் துலக்கமுறக் கண்டுவருகிறோம்!

கிரீசு போலும் மேலைநாடுகளில் நிலவிய கொடுமையான ஆண்டான் அடிமை முறையும், தமிழகம் உள்ளிட்ட நாவலம் கண்டத்தில் நெடுங்காலமாக வாழ்ந்துவரும் சாதிய முறையும், தீண்டாமை, அணுகாமை, பாராமை வழக்கங்களும், நாகரிகத்தின் நுனிக்கொம்பேறிய இனங்களின் அநாகரிகத் தன்மைகட்குத் தக்க காட்டுகளாகும்!

இந்த அநாகரிகத் தன்மையைக் கொண்டிருப்பதாலேயே பெரியார் தமிழர்களைக் 'காட்டுவிலங்காண்டிகள்' எனக் கூறினார்!

இத்தகைய அநாகரிகப் பண்பியல்புகள் பெரும்பாலும், நாகரிக உயர்வளர்ச்சி ஏற்பட்ட மக்களினங்கட்கிடையே மட்டுமே உருப் பெற்று வளர்ந்திருப்பதை வரலாறு நமக்கு விளக்குகிறது!

இத்தகைய பண்புக்கூறுகள்தம் ஓரினத்தை வீழ்த்தும் வலிமை சான்றவை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும்!

**சாதியமும், ஆரியமும், தமிழரும் :**

அண்மைக் காலம் வரை, இனமீட்பு நோக்கிலான வரலாற் றாசிரியர்களும், எழுத்தாளர்களும் சில நோக்கங்களை முன்னிட்டு வரலாற்றைத் தலைகீழாக மாற்றிக் கூறிவந்தார்கள்.

சாதி என்ற சொல்லும், சாதிய முறையும் ஆரியர்களால் புகுத்தப்பட்டவை என்றும், தமிழர்களுக்குச் சாதிமுறையே கிடையாதென்றும் கூறிவந்தார்கள்! 'சாதி வேறுபாடற்ற ஒரு நாகரிகம்தான் திராவிட நாகரிகம்' என்ற விளக்கம் அவர்களால் தரப்பட்டுவந்தது!

இப்படி அவர்கள் கூறியதன் காரணம், 'நம்முடையது அல்லாத ஒன்றை, நமக்கே கேடு பயப்பதான ஒன்றை' நாம் விட்டு கூட வேண்டும் எனக்கருதித் தமிழர்கள் சாதியை உதற முன்வரக் கூடும்' என அவர்கள் கருதியதுதான்! ஆனால், சாதியைக் கைவிடத் துணிந்தவர்கள் மிகச் சிறுபான்மையினரே! மிகப் பெரும்பாலான மக்கள் இன்றும் சாதியை விட மறுப்பவர்களாக உள்ளனர்! சாதிய வெறி, எல்லாத் தரப்பு மக்களுக்கும் இன்றும் வலுவாக ஊட்டப் பட்டுவருகிறது!

இந்தச் சாதிமுறை எங்கே தோன்றியது? எப்போது தோன்றியது? ஏன் தோன்றியது? - என்பனபற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

உலக வரலாற்றை நம் ஆழ்ந்து நோக்கினால், பல இடங்களில், பல நாடுகளில் அடிமைமுறை நடப்பில் இருந்து வந்திருக்கிறது; மாந்தனை மாந்தன் விற்பதும் வாங்குவதும் நடப்பில் இருந்து வந்திருக்கின்றன! ஆனால், அங்கெல்லாம், அடிமை ஆண்டையுடன்

தங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறான்! ஆண்டையால் அவன் தீண்டப் பட்டிருக்கிறான்! ஆண்டை செல்லும் எல்லா இடங்களுக்கும் அவனும் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறான்!

இதற்கு மாறாக, இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிய சாதிப முறையில் சிலர் பார்க்கத் தகாதவர்கள்; சிலர் அணுகத் தகாதவர்கள்; சிலர் தீண்டத்தகாதவர்கள்; சிலர் உடன்வாழத் தகாதவர்கள்!

மொத்தத்தில் இங்கே 'குமுகாயம்' (Society) என்ற அமைப்பே இல்லாமல், எங்கும் குலங்களும் குக்குலங்களும் (Castes and Tribes) மட்டுமே இருந்து வந்துள்ளமையை - இன்றும் இருந்து வருகின்றமையை நாம் காண்கிறோம்! இந்தச்சாதிமுறை, ஆரியர்களால் நம்மைப் பிளவு செய்வதற்காகப் புகுத்தப்பட்ட ஒன்று என நம்பினால், அது பேதைமையான ஒன்றாகவே அமையும்! @

ஆரிய இனங்களிடையேயிருந்து சாதியமுறை நமக்குள் ஊடுருவியிருந்தால், தூய ஆரியரான வெள்ளை இனத்தவரிடையிலும், ஈரானியரிடையிலும் அதன் சுவடுகளாகிலும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை!

மாறாக, ஈராயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே "சாதி" என்ற சொல் தமிழில்தான் வழக்கிலிருந்திருக்கிறது. இதற்கான வேரும் தமிழில் மட்டுமே காணப்படுவதாயுள்ளது!

'சாதி' என்பது அக்காலத்தில் - தொடக்கநிலையில், உயிரின வகைகளை மட்டுமே குறிப்பிடுவதாயிருந்தது. 'நீர்வாழ் சாதி, நிலம் வாழ்சாதி என்னும் தொடர்கள் இதனை விளக்கும். 'நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய' என்பது தொல்காப்பியம். இதன் வேர் 'சார்' என்பது. சார் - சார்தி - சாதி! ஒ.நோ : வீழ் - வீழ்தி - வீதி!

தொடக்க நிலையில் உயிர்வகைகளை மட்டுமே குறித்த இந்தச் சொல், ஆரிய மொழியில் அப்படியே நுழைந்தபோது, முழங்கொலி பெற்று 'ஜாதி' என ஆனது.

தமிழில் இச்சொல் கொண்டிருந்த பொருளுக்கு மாறான தன்மையில் அன்று நடப்பிலிருந்த குலப்பிரிவினையைக் குறிப்பிடுவதற்கு ஆரிய நுழைவாளர் இச் சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர்!

---

@ இக்கருத்து, கடுமையான திறனாய்வுக்கும் மறுப்புக்கும் உட்பட்டது, குலப்பாகுபாட்டின் தோன்றுகளம் தமிழினமே என்பதும், இதைக் கோட்பாடும் நிறுவனமுமாக ஆக்கியோர் மட்டுமே ஆரியர் என்பதுமே இக்கருத்தின் சாரம். மறுப்புக் கருத்துகளும் சிந்தனைக் குரியவை.

குலப்பாகுபாடு,'சாதி' எனும் பெயருடன் நிறுவனம் ஆனதும், சாதி வரம்புகளும் தீண்டாமையும் இறுக்கமடைந்ததும் ஆரியப் பிராமணரின் செயலாக்கங்களே ஆகும்.

உயிர்வகைப்பாட்டைக் குறித்த 'சாதி' என்னும் சொல்லைக் குலப் பாகுபாட்டைக் குறிப்பிட அவர்கள் கையாண்டதன் காரணம், 'குலப்பாகுபாடு என்பது பிறப்பின் அடிப்படையிலானது; அதிலிருந்தும் மாற்றம் பெற இயலாது' என்பதை நுட்பமாக உணர்த்துவதற்கே ஆகும்!

இந்தச் சாதிய முறையின் தொடக்கவடிவமான குலப்பாகுபாடு, 'தொழிற்பாகுபாடு' என்னும் நிலையைத் தாண்டிச் சென்றது திராவிட இனங்கட்கிடையிலாகவே தெரிகிறது! எனவே சாதியத்தின் ஊற்றுக்கால் திராவிட இனமே என நாம் கருதவேண்டியுள்ளது!

இது முளைத்துத் தழைத்து வளர்ந்து வந்தது, இந்தியத்துணைக் கண்டத்தின் வடபகுதியிலாயினும், தென்பகுதியிலாயினும், திராவிடக் குலமரபுகட்கு இடையில்தான்! அண்மைக்கால வரலாற்றுக் குமுகவியல் ஆய்வுகள் இதனையே வழிமொழிகின்றன! மேலும், திராவிட இனத்திற்கே உரிய தனித்தன்மைகளில் ஒன்றாகவும் சாதியம் உணர்த்தப்படுகிறது!

ஏன் சாதியமுறை இங்கே உருப்பெற்றிருக்க வேண்டும்?

மிகப் பழங்காலத்திலேயே, ஆட்சிமுறை, வாழ்க்கைமுறை, படைப்பாக்கமுறை, வாணிக முறை போன்ற உயர்நாகரிகப் பாங்குகளில், தமிழினம் உச்சநிலையை அடைந்துவிட்டுள்ளது.

ஆளும் உயர்மட்டக்குடிகள், அறிவுரை கூறும் படிப்பாளி வகுப்பு, நிலங்களைக் கையகப்படுத்திய பிரிவினர், வாணிக வகுப்பினர், உழைப்பை மட்டுமே நம்பிய குடிமக்கள் என்னும் குமுகாயப் பிரிவுகள், ஒரு நாகரிக முதிர்ச்சிபெற்ற மக்களினத்தில் தவிர்க்க முடியாதவாறு தோன்றி வளர்ந்திருக்கும்!

உழைப்பை மட்டுமே நம்பிய குடிமக்கள், கல்வி வாய்ப்புப் பெறாதவர்களாக, பல்வேறுபட்ட வாழ்க்கை நிலைகளைக் கொண்டவர்களாக, நாகரிக வளர்ச்சி நிலையில் ஏற்றத்தாழ்வான வேறுவேறு படிநிலைகளில் நிற்பவர்களாக இருந்திருப்பார்கள்!

அவர்களுக்கிடையிலான குருதி உறவுகளும், குறித்த நில எல்லையைத் தாண்டாத வண்ணம் மட்டுமே அமைந்திருக்கும்!

இவ்வகைத் தன்மைகளையுடைய குக்குலங்கள், காலச் செலவில் தனித்தனிச் சாதிகளாக உருமாற்றம் அடைந்துவிடும்! இவை பெரும்பாலும் உழைப்பை மட்டுமே நம்பிய குடிகளாகும்!

வேளாண்மை வளர்ச்சி, வலுவானகடல்வழிப் போக்குவரத்து வளர்ச்சி, முதலானவை மேம்பாடு அடையும்போது, ஏதொன்றிலும் உரிமை மறுக்கப்பட்டதும், வாழ்நிலையில் மிகப்பின் தேங்கியதும், கூழுக்காக மட்டுமே உழைப்பைச் செலவிடுவதும் ஆகிய ஒரு பெரிய வகுப்பு நிலவுடைமையாளர்கட்கும் கடல்வாணிகர்கட்கும் தேவையாகியது!

கல்வி வாய்ப்புப் பெறாத, உழைப்பை மட்டுமே நம்பிய. அநாகரிக வாழ்க்கைமுறையைத் தாண்டிக் கடவாத, கவடமற்ற மக்கட் கூட்டங்கள் சிலவற்றை -

உரிமை மறுக்கப்பட்ட, வாழ்க்கை நலன்கள் தடுக்கப்பட்ட, கூழுக்காக மட்டுமே உழைப்பைச் செலவிடும் ஒரு வகுப்பாக மாற்றுவது, நிலவுடைமையாளர்கட்கும், அரசுக்கும், பெருவாணிகர்கட்கும் எளிதாக இருந்தது!

இந்த உரிமை மறுக்கப்பட்ட குலங்களே, காலச்செலவில், தீண்டத்தகாத, அணுகத் தகாத, உடன்வாழத் தகாத சாதிகளாக நிலைப்படடிருக்கக் கூடும்!

இடைப்பட்ட மக்கட்கூட்டங்கள், தமக்கு மேலாகச் சில பிரிவினரையும், தமக்குக்கீழாகச் சில பிரிவினரையும் கொண்டிருப்பார்கள்! படிக்கட்டுத் தன்மையிலான இச் சாதிகள் தோன்றி நிலைபெற்ற கதை இப்படிப்பட்ட போக்கில்தான் இருக்க இயலும். இத்தகைய தன்மைகள், ஒரு வளர்ச்சி பெற்ற, புறநாகரிக முதிர்ச்சி பெற்ற மக்களினத்திலதான் தோன்றி வளர்வதற்கு வாய்ப்புகள் உண்டு. இவ்வாறு, படிக்கட்டுத் தன்மையிலான சாதியமைப்புகள் கொண்ட ஒரு குமுகாயம், தனனுள் பகைத்து நிற்கவும் தன்னைச் சிதைக்க வரும் புற ஆற்றல்களுக்கு வரவேற்புக் கொடுக்கவும், புதிய சிந்தனைகள் எவையும் உட்புகாமல் தடுத்துக் கொள்ளவும் முனையும்! ஆனால், சாதியமைப்பை, இனச்சீர்குலைவை மேம்படுத்த வரும் எவரையும் இஃது உவந்துஓம்பி வரவேற்கும்! இவ்வாறு வரவேற்கப்பட்ட ஓர் இனம்தான் ஆரிய இனமாகும்!

தொடக்கத்தில் ஆரிய இன நுழைவு, தொல்குடிகளான, திராவிட இன மக்களுக்குப் பகைமையானதாக இருந்திருக்கலாம்! ஆனால், உள்நுழைந்த ஆரியர்கள், காலச் செலவில், புதிய சூழலுக்குத் தக்கவாறு தம்மை மாற்றியமைத்துக் கொண்டார்கள்! இங்கே நடைமுறையிலிருந்த குலப்பாகுபாடும்,ஒதுக்கப்பட்ட மக்கள் உரிமை ஏதும் இன்றி உழைத்து வந்ததும், அவர்தம் ஒதுக்கப்பட்ட வாழ்க்கைமுறையும், புதிய நல்வாய்ப்பு ஒன்றை ஆரியருக்கு உருவாக்கித் தந்தன!

வந்தவர்கள், முழங்கொலி மிகுந்த தம் மொழியை உயர்வுடையதாய்க் காட்டியும், தம் வெளுத்த நிறத்தைப் பிறவி உயர்வாக

எடுத்துரைத்தும், அரசர்களுக்கு அறிவுரையாளராக அமர்ந்து கொண்டனர்! தம சூழ்ச்சித் 'திட்டத்தால், தம்மை நிலத்தேவர் என நம்பும்படி செய்தனர்!

தாம்வழிபட்ட கடவுள்களைத் திராவிடக் கடவுள்களுடன் இணைத்துவிட்டனர்! திராவிட மக்கள் அரசர்களாகவும், வணிகர்களாகவும், உழவர்களாகவும், பிற உழைப்பாளர்களாகவும் இருக்க, ஆரியர்கள் மட்டும் அனைவர்க்கும் மேற்பட்ட பிராமணர்களாகத் தம்மை உருச்சமைத்துக் கொண்டனர்!

இவ்வாறுதான், பிராமணத் தலைமைகொண்ட நாற்சாதிமுறையும், ஐந்தாம் சாதி முறையும் இங்கே ஊன்றப்பட்டன!

இந்தச் சாதி அமைப்பை, ஒரு வாழ்க்கை ஒழுங்காகவும், அறநெறியாகவும் மாற்றியதில் ஆரியக்கலப்புக்கொண்ட தென்னகத்துப் பார்ப்பனர்களும், இவர்களின் அடிப்பொடிகளான சேர, சோழ, பாண்டியக் கொள்ளையர் உள்ளிட்ட எல்லா அரசர்களும், நிலக்கிழார்களும், வாணிகர்களும் பெரும்பங்கு பெற்றுள்ளனர்!

இந்தச் சாதிமுறை தழுவிய மக்கள்நேயக்கேடுகள் அனைத்தும் வளர்ந்து வளர்ந்து சோழர்காலத்தில் உச்சநிலையை அடைந்து, குமுகாயக் காட்டுமானமாக இறுக்கமுற்று நிலைத்தது!

சேரர்களும், சோழர்களும் போட்டியிட்டுக் கொண்டு, ஆரியப் பிராமணர்களை வடநாட்டிலிருந்தும் அழைத்துவந்து தம் ஆளுகைக்குள் குடியமர்த்தினர்!

இந்தச் சாதிமுறை முற்றும் ஒழிக்கப்படவேண்டும் என்பதை அன்றும் இன்றும் உளமார ஏற்பவர்கள், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களே!

இது ஒழிக்கப்பட வேண்டும் என்னும் குமுகாயச் சிந்தனை, பெரியார் காலம்வரை எந்தத் தலைவனுக்கும் தோன்றியதில்லை!

சித்தர்கள் என்னும் குமுக அறிவாளர்கள் மட்டுமே மக்களொடு மக்களாய் வாழ்ந்து, சாதியத்திற்கு எதிரான கருத்துகளைப் பரப்பி வந்தனர்! ஆனால், இவர்தம் முழக்கங்கள் நிலவுடைமையாளரால், அதிகம் வெளித்தெரியாமல் அமுக்கப்பட்டுவிட்டன!

இந்த அநாகரிகச் சாதிமுறை, அன்றுமுதல் இன்றுவரை நிலை பெற்று நிற்பதனால், "குமுகாயம்" என்னும் அமைப்பே தோன்ற முடியாமல் போய்விட்டது!

தமிழகத்தில் குமுகாயம் இல்லாதுபோய், சாதியும் குலங்களும் குக்குலங்களும் மட்டுமே நடப்பில் இருந்ததால், கடந்த 1800 ஆண்டுகட்கும் முன்பே தமிழினம் தாழ்ந்து நொறுங்கத் தொடங்கி

# தென்மொழி வளர்ச்சிக்கான மற்றுமொரு தீர்வுத் திட்டம்!

பேரன்புடையீர், வணக்கம்.

தென்மொழியையும் அது தொடர்பான பிற வெளியீட்டு நிலைகளையும் வலுப்படுத்துவதற்கு முன்பே அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் என்ற தலைப்பில், வாணாள் உறுப்பினர் கட்டணம், உறுப்பினர் சேர்த்தல், நன்கொடையளித்தல் போன்ற சில செயற்பாடுகளை அன்பர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இவ் வறிவிப்பில், இன்னொரு வளர்ச்சித் திட்டத்தை அன்பர்களின் கனிவான பார்வைக்கு முன் வைக்கின்றோம்.

தென்மொழியின் முதல் பக்கத்தில் புரப்பாளர்கள் பெயர் வரிசை ஒன்று வெளிவருவதை அன்பர்கள் பார்த்திருக்கலாம்.

தென்மொழி வளர்ச்சிக்கென ஆயிர உருபாவும் அதற்கு மேலும் நன்கொடையளிப்பவர்களை அப்பெயர் வரிசையில் நிலையாகச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் தொடக்கத்தில் அத் தகையவர்களின் படங்களையும் வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

எனவே, தென்மொழிப் புரப்பாளர்கள் பெயர் வரிசையில் நிலையாகத் தங்கள் பெயரும் இடமும்பெற விரும்பும் அருளாளர்கள், அதற்குரிய நன்கொடைகளை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

இனி, இதுவரை தென்மொழிக்கும் தமிழ்ச்சிட்டுக்கும் வாழ்நாள் உறுப்பினராக ஆகியுள்ளவர்தம் புகைப்படங்களையும், அவ்வவ் விதழ்களில் வெளியிடவும் முடிவு செய்துள்ளோம்.

எனவே, தென்மொழிப் புரப்பாளர்களாக ஆக விரும்புகிறவர்களும், தென்மொழி; தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களுக்கு வாழ்நாள் கட்டணம் செலுத்தியவர்களும், செலுத்த விரும்புகிறவர்களும், தங்களின் மார்பளவுப் புகைப்படங்களை, எல்லைக்கடவு (Pass-Port) அளவில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— பெருஞ்சித்திரனார்

---

*(முன் பக்கத் தொடர்ச்சி)*

விட்டது! இது தாழ்ந்து நொறுங்கிக்கொண்டு வந்ததைத் தமிழர்கள் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டதற்கும் சாதியும் நிலக்கிழமை அமைப்புமே காரணமாகும்!

நச்சுத் தன்மை வாய்ந்ததும், மாந்த மாண்புக்கே பகையானதாகத் திகழ்வதும் ஆகிய இந்தச் சாதியத்தைப் பயிர்செய்தவர்கள் என்ற அடிப்படையில், இந்தச் சாதியத்தால் வாழ்க்கை அறத்தைச் சிதைத்துக் கொண்டவர்கள் என்ற நோக்கில்தான் பெரியார் தமிழரைக் காட்டு விலங்காண்டிகள் என்று கூறினார்! தமிழரால் விளைவிக்கப்பட்ட காட்டு விலங்காண்டித்தனம், உலகக் காட்டு விலங்காண்டித்தனங்கள் அனைத்திலும் உயர்வானதாகும்! — (தொடரும்.)

# அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் நிற்காமல் தொடர்ந்து வெளிவரும் என்றும் அவ்வாறு வருவதற்கு அன்பர்கள் என்ன வகையான முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் முந்தைய மாதத் தென்மொழி (சுவடி: 20, ஓலை 5-6)-இல் ஒரு திட்டம் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

அத்திட்டத்தை மீண்டும் கீழே தருகிறோம். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும், நிற்கக்கூடாது என்று விரும்பும் நன்னெஞ்சங்கள் அருள்கனிந்து இத்திட்டத்திற்கு ஒல்லும் வகையால் உதவ வேண்டுகிறோம்.

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு படிக்கின்ற ஒவ்வொருவரும் அல்லது இவ்விரண்டு இதழ்களும் தேவை என்று உணர்கின்ற ஒவ்வொருவரும், உடனடியாக ஆளுக்குப் பப்பத்து உறுப்பினர்களை (ஒவ்வொருவரும் அவரவர் படிக்கின்ற இதழ்க்கு)க் கட்டாயம் சேர்த்து உதவுதல் வேண்டும், பத்து உறுப்பினர்களைச் சேர்த்துத் தருபவருக்கு ஓராண்டு உறுப்பாண்மை இலவயமாக அளிக்கப்படும்.

2. தென்மொழி'க்கு வாணாள் உறுப்பினர் கட்டணம் உரு 200/ தமிழ்ச்சிட்டுக்கு உரு. 120 /-

பத்து உறுப்பினர்களைச் சேர்க்க இயலாதவர்கள் அவர்கள் படிக்கின்ற ஏதேனும் ஓரிதழுக்கு ஐந்து வாணாள் உறுப்பினர் கட்டணங்களை வாங்கி அனுப்புதல் வேண்டும். அத்தகையவர்க்கும் ஓராண்டு உறுப்பாண்மை இலவயம்.

3. இத்துடன் தங்கள் ஊரில் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு வரவில்லையானால், அங்கு 10 இதழ்களை வாங்கி விற்குமாறு முறைப்படி முன்பணம் கட்டும் முகவர் ஒருவரை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4. இவையன்றித் தாங்கள் இவற்றின் வளர்ச்சிக்கென விரும்பும் கணிசமான நன்கொடைகளைத்தரவும். இயன்றால் திரட்டி அனுப்பவும் வேண்டும். இந்நான்கு முயற்சிகளையும் தொடர்ந்து ஒரு மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் செய்து நிலையைச் சரி செய்தல் வேண்டும்.

போதுமான அளவு நிலை சரிசெய்யப் படாதபொழுது நாம் என்ன செய்வது? எனவே முடிவை அந்த விளைவுக்கே விட்டு விடுவோம். இவ்வகையில் ஈடுபடுபவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து இதழ்களில் வெளியிடப்பெறும்.

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

## மூப்பு வருவது ஏன்?

இளமையைக் காக்கும் வழிகளைச் சிறிது இங்கு ஆராய்வோம்: மிகு புணர்ச்சியினால் மூப்பு விரைவில் வந்தடையலாம். மிகு புணர்ச்சியின்போது உண்டாகும் நரம்புக்கிளர்ச்சி 'அட்ரினல்' சுரப்பிகளுக்குக் கேடு உண்டாக்கவல்லது. அந்த நரம்புக்கிளர்ச்சியால் குருதி அழுத்தத்தில் மாற்றங்கள் உண்டாகின்றன. இம் மாற்றங்களால் குருதிக்குழாய்கள் தடித்துச் சுருங்குகின்றன. மிகு புணர்ச்சியால் 'தைராயிடு, சுரப்பியிலும் மாற்றங்கள் உண்டாகின்றன. நோயைத் தடுக்கும் ஆற்றல் குறைகின்றது. நரம்புத் தளர்ச்சி வந்தடைகின்றது. இதுபோன்றே, முழுக்க முழுக்கப் புணர்ச்சியை விலக்கினும் கேடுகள் உண்டாகலாம. ஆகவே, புணர்ச்சியில் மிகுதலுக்கும், விலக்கலுக்கும் இடையே உள்ள ஒரு நல்ல நிலையைக் கைக்கொள்ளவேண்டும். பெண்களுக்கு அடுத்து அடுத்துப் பல பிள்ளைப்பேறுகள் உண்டானால், அவர்கள விரைவில் முதுமை அடைகின்றனர். அதேபோன்று ஆண்கள் மிகுபுணர்ச்சியால் விரைவில் முதுமை அடைகின்றனர். புணர்ச்சியை முழுவதும் விலக்கினாலும் இளமையிலேயே மூப்பு வந்தடையலாம். மணம் ஆகாத கன்னிகள், முப்பது அல்லது நாற்பது அகவையில் அதே அகவையுடைய மணமான பெண்களைவிட மூப்படைந்தவர்கள் போல் காணப்படுவதை யாரும் மறுக்க இயலாதன்றோ?

இயற்கை எதையும் பயன் அற்றதாகவோ அல்லது, இழிவு உடையதாகவோ படைத்திருக்க முடியாதன்றோ? பிற உறுப்புகள் போன்றே சூற்பைகளையும், வித்துகளையும், குறிப்பிட்ட காரணம் கருதியே படைத்திருக்க வேண்டும் என்பதில் எவ்வகை ஐயமும் வேண்டாம். அவற்றையே வேலை அற்றவையாக, வெறுமனே வைத்திருந்தால் அவற்றிற்குக் கேடு விளையும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? குறிப்பிட்ட கலவி உறுப்புகளை மட்டும் தனித்துப் பேசுவானேன். அவை செய்த குற்றம்தான் என்ன? இறைவனுக்குத் தான் வெளிச்சப்!

வெறியம் தூம்பற்ற சுரப்பிகளுக்கு நஞ்சாகும். கிழவர்களின் சுரப்பிகளுக்கு வெறியத்தின் நஞ்சால் உண்டாகும் கேட்டிற்கு அளவும் உண்டோ? கொஞ்ச அளவில் வெறியத்தை உட்கொண்டால் முதலில் தூம்பற்ற சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. ஆனால் மிகுந்த அளவில் நெடுநாட்களாக உட்கொண்டுவந்தால் தூம்பற்ற சுரப்பிகள் பழுதடைகின்றன. குளம்பி (காப்பி)யும் தேயிலையும்

வெறியம் போன்றே தூம்பற்ற சுரப்பிகளைத் தாக்குகின்றன. ஒவ்வொருநாளும் குறைந்த அளவில் அவற்றை உட்கொண்டால் தீங்கு உண்டாவதில்லை. சில வேளைகளில் நன்மைகூட உண்டாகிறது. ஆனால் வழக்கமாகவே மிகுந்த அளவில் உட்கொண்டால் தீங்கு விளைவிக்கலாம். மூப்பின் குறிகளைத் தோற்றுவிக்கலாம்.

புகையிலை, குருதிக்குழாய்களைத் தடிக்கச்செய்து சுருங்கச் செய்கின்றது. 'அட்ரினல்' சுரப்பிகளுக்குத் தீங்கு பயக்கின்றது. இளைஞருக இருப்பினும்கூட புகையிலை ஒருவனுடைய ஆண்மையைக் குறைக்கின்றது. வெறியம், புகையிலை போன்ற பொருள்களால் சிலருக்குத் தீங்கு நேராதிருக்கலாம். அதனால் அவற்றால் எல்லோருக்குமே தீங்கு ஏற்படாது என்பது பொருள் அன்று. அச் சிலரின உடல்தன்மை இக் கேடுகளைத் தாங்கக் கூடியதாக இருக்கலாம். அக் கேடுகளே மற்றவர்களின் உயிரைப் போக்கப் போதுமானவையாக இருக்கலாம்.

பிழைபட்ட உணவாலும், தீங்கு உண்டாகலாம். மூப்படைந்தவர்கள், மிகுந்த உணவு, குறிப்பாக இறைச்சி உணவு, உட்கொள்ளக்கூடாது. இறைச்சி உணவின் முரிவால் பல நஞ்சுகள் வெளியாகின்றன. இந்த நஞ்சுகள் தூம்பற்ற சுரப்பிகளின் நீர்களால் அழிக்கப்படுகின்றன. மூப்படைந்தவர்களுக்கோ தூம்பற்ற சுரப்பிகள் சரியாக வேலை செய்வதில்லை. ஆகவே இந்த நஞ்சுகள் தூம்பற்ற சுரப்பிகளுக்கு ஒரு சுமையாகின்றன. அல்லது நஞ்சுகள் சேர்க்கப்பட்டுப் பிழையான வழிகள்மூலம் வெளியேற்றப்படுகின்றன.

உண்டு, உறங்கி, எவ்வேலையும் செய்யாது வாளா இருந்தாலும் மூப்பு விரைவில் வந்தடையும். நரம்புகளால் நெடுநாட்களுககு வேலை அற்று இருக்க இயலாது. வேலையற்று இருந்தால் அவற்றின் தூண்டும் ஆற்றல் மறைகின்றது. நரம்புகள் பழுதடைகின்றன. ஏதாவது ஒருவகையில் உடல் உழைப்பு வேண்டற்பாலது. அப்பொழுதுதான் தசைகளுக்குக் குருதி மிகுந்த அளவில் வந்து சேரும். தசைகளும், நரம்புகளும, தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்ய இயலும். ஏதாவது ஒருவகை வேலை செய்தல் இளமையில் ஏற்படும் மூப்பைத் தடுக்க உதவுகிறது. வாளா இருத்தலுக்கு, மனத்தினாலேயே வேலைசெய்வது எவ்வளவோமேல். மனவேலையுடன் உடல் உழைப்பும் சிறிது இருக்குமாயின் மிகநன்று.

மிகுந்த துன்பம் அல்லது கவலை போன்ற வெப்ப மிகுந்த மனக்கிளர்ச்சிகள் மூப்பை விரைவில் வரவழைக்கும் தன்மை உடையன. இளைஞர்கள் இவ்வகையான வெப்பமிகுந்த மனக்கிளர்ச்சிகளால் அடிக்கடி தாக்கப்பட்டால் கிழத்தன்மை அடைகின்றனர். மிகுந்த மன அதிர்ச்சி ஏற்பட்ட சிலமணி நேரத்திற்குள்ளாகவே மூப்பின் அறிகுறி தென்படுவதைக் காணலாம். மூப்பின் தனி

அடையாளமான தலைமயிர் வெளுத்துப்போதல் நிகழ்கின்றது. இந்த மனக்கிளர்ச்சிகள் அஃதாவது, சினம், கவலை, துன்பம், அச்சம், பதைப்புப் போன்றவை தூம்பற்ற சுரப்பிகளுக்குக் கேடு விளைவிக்கக் கூடியன. இக் கிளர்ச்சிகள், தூம்பற்ற சுரப்பிகளை எல்லாம் அடக்கி ஆளும், 'பிட்யூட்'டரியில் அமைந்துள்ள நடுவத்தையும் தாக்குகின்றன. உடலில் உண்டாகும் அழுக்குகள் பிழையான வழிகளின் மூலம் வெளியேற்றப்பட்டாலும், விரைவில் மூப்பு வந்தடையலாம். மலமாகவும், சிறுநீராகவும், வெயர்வையாகவும் வெளியேறும் அழுக்குகளின் வழிகளில் தடைகள் ஏற்பட்டால் நச்சுப்பொருள்கள் உடலில் தங்குகின்றன. அந்த நச்சுப் பொருள்கள் உடலை மயக்கமுறச் செய்கின்றன. இக்கழிவுப் பொருள்களின் வெளியேற்றம் தூம்பற்ற சுரப்பிகளின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியது. மூப்பின் காரணமாகத் தூம்பற்ற சுரப்பிகள் சரியாக வேலை செயவதிலலை. அதனால் கழிவுப் பொருள்களை வெளியேற்றும் கட்டுப்பாடு தளர்த்தப்படுகிறது. ஆகவே கழிவுப் பொருள்கள் உடலினுள் தாங்குவதால் உண்டாகும் நஞ்சு தூம்பற்ற சுரப்பிகளுக்குமட்டும்தான் கேடுவிளைவிக்கின்றது என்பது அன்று. உடலை மயக்கமுறச் செய்கிறது. குருதிக்குழாய்களைத் தடிக்கச் செய்து சுருங்கச் செய்கின்றது. ஆகவே மூப்பு தானே இதோ வந்தேன், வந்தேன் என்று வந்தடைகின்றது.

இயற்கையாக வரும் மூப்பும் ஒருவகை நோயே, இளமையில் வரும் மூப்பும் ஒருவகை நோயே. மற்ற நோய்களைப் போன்று அவற்றிற்கும் தக்க மருத்துவம் செய்தால் அவற்றை நீக்கலாம். மூப்பு நோய்க்கு மருத்துவத்தை தடுப்புமுறை, மருந்துமுறை என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். சில தூம்பற்ற சுரப்பிகள் பழுது அடைவதால்தான் மூப்பு வந்தடைகிறது, என்பதை முன்பே பார்த்தோம். மூப்பு வராதிருக்க அச் சுரப்பிகள் பழுது அடையாத படி பார்த்துக் கொள்ளவேண்டும். அல்லது அச் சுரப்பிகளைத் தாக்கும் தீங்குகளை அகற்ற வேண்டும். தூம்பற்ற சுரப்பிகள் பழுதடைந்தால் தக்க உறுப்பு மருத்துவமுறை மூலம் மருத்துவம் செய்து கொள்ளவேண்டும். மூப்பைத் தடுப்பதற்கு, இன்று அறுவை முறையைவிட உறுப்பு மருத்துவமுறைதான் சிறந்தது. மேலும் அறுவைமுறையைத் தாங்கும் ஆற்றல் கிழவர்களுக்குக் குறைவு. மூப்பைத் தடுக்கப் பொருத்தமான மருத்துவமுறை, மேலே கூறிய முறைகளைவிட மிகப் பரந்தது, விரிந்தது, இளமையுடன் விளங்க சில முறைகளைச் சுருங்கக் கூறுவோம்:

## இளமையைக் காக்கும் வழிகள் :

மூடிந்தமட்டில், திறந்த வெளியில் குறிப்பாக ஞாயிற்றின் ஒளியில் தங்க முயலுங்கள். வேண்டிய அளவு உடற்பயிற்சி செய்யுங்கள். உட்கொள்ளும் காற்றை நன்றாக உள்ளே இழுத்து

பின் மெதுவாக வெளியேதள்ளுங்கள், இஃது ஓர் ஒழுங்குமுறையாக நடைபெறட்டும். உட்கொள்ளும் உணவு கலப்பு உணவாக இருக்கட்டும். இறைச்சி உண்போர் ஒருநாளைக்கு ஒருவேளை இறைச்சியும் முட்டையும் உட்கொள்ளலாம். உணவில், புதிய பச்சைக் காய்கறிகள், பழங்கள், நல்ல ஆவின்பால் (வயிறு கொள்ளும் மட்டும்) இடம்பெற வேண்டும். எவ்வகைக் காரணம் கொண்டும் மிகுதியாக உணவை உட்கொள்ளக் கூடாது. ஒருநாளைக்கு ஒருவேளையேனும் குளிக்கவேண்டும். நெஞ்சாங்குலை தாங்கக் கூடிய நிலையில் இருந்தால் இரண்டு கிழமைகளுக்கு ஒருமுறை, உடலுக்குச் சூட்டை ஏற்றி, வெயர்வையை வெளியேறச் செய்யும் குளியல் முறையைக் கைக்கொள்ளலாம். ஒவ்வொருநாளும் ஒழுங்காக மலம் கழிக்கவேண்டும். மலச்சிக்கல் ஏற்படுவதுபோல் காணப்பட்டால் மாதத்திற்கு ஒருமுறை பேதி மருந்து உட்கொள் ளலாம். உள்ளே அணியும் துணி அழுத்தமில்லாததாகவும் பருத்தி ஆடையாகவும் இருக்கவேண்டும். சட்டைகள் உடலோடு ஒட்டி இராதபடி தொள தொளப்பாக இருக்கவேண்டும். தொப்பி அணிந்தால் அது கனமில்லாததாக இருக்கவேண்டும். மென்மையான செருப்பை அணியவேண்டும். இரவில் ஒன்பதுமணிக் கெல்லாம் படுக்கைக்குச் சென்று, காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருந்துவிட வேண்டும். தூங்கும் இடம் தூய்மை உடையதாகவும், காற்றோட்டம் உள்ளதாகவும், இருட்டாகவும், அமைதி உடையதாகவும் உருக்கவேண்டும். ஆறிலிருந்து ஆறரை மணிக்குக் குறைவாகத் தூங்கக்கூடாது. ஏழிலிருந்து ஏழரை மணிக்குமேல் தூங்கக்கூடாது. பெண்களானால் எட்டிலிருந்து எட்டரைமணி வரை தூங்கலாம். கிழமைக்கு ஒருநாள் முழு ஓய்வாக இருக்கவேண்டும். அன்று படிப்பதும் எழுதுவதும் கூடக்கூடாது. நடந்தவற்றைப்பற்றியோ, நடக்கப்போகிற வற்றைப்பற்றியோ, மற்றும் எதைப்பற்றியோ நினைந்து மனக் கிளர்ச்சி அடையக்கூடாது. விரும்பத்தகாதவைப்பற்றிப் பேசாதீர்கள். அவற்றைக் காது கொடுத்துக் கேட்காதீர்கள். மனைவி யுடன் வாழுங்கள். மனைவி இறந்துவிட்டால் விரும்பின் மறுபடியும் மணம் செய்து கொள்ளுங்கள். உடல் தாங்கும் அளவிற்குமேல் கலவி இன்பம் துய்க்காதீர்கள். புணர்ச்சியில் வெறுப்புக் கொண்டு முழுவதும் புணர்ச்சியையே விலக்கி விடாதீர்கள். வெறியத்தையும், புகையிலையையும் அறவே அகற்றுங்கள். குளம்பி (காப்பி)யையும், தேயிலையையும் குறைந்த அளவில் பயன்படுத் துங்கள். காற்றோட்டமில்லாத இடங்களிலும் சூடான இடங்களி லும் இருக்காதீர்கள். மூப்பின் காரணமாகவோ, நோயின் காரண மாகவோ கலவி உறுப்புகள் வேலை செய்யவில்லை என்றால் தகுந்த 'ஆர்மோன்'களைக் கொடுத்து, அவ்வுறுப்புகளை மறுபடியும் வேலை செய்யத் தகுதி உடையனவாகச் செய்யுங்கள். இஃது இம் மருத்துவ

# நீ தான்!

பாவலர். **தரங்கை. பன்னீர்ச்செல்வன்.**

(தனிச்சீர் சமனிலைச் சிந்து)

நிலத்துக்குப் பொறையாக நிலவுகின்றாய் — ஒரு
 நிலையான கோளின்றி உலவுகின்றாய்;
மலத்துக்கு மலர்தூவிப் பரவுகின்றாய்; — மத
 மயக்கத்தில் இனப்பற்றை அரவுகின்றாய்! (நிலத்துக்கு)

பணத்துக்குக் கைத்தாளம் போடுகின்றாய் — ஒரு
 பதவிக்குப் புகழ்ப்பாட்டுப் பாடுகின்றாய்;
பிணத்துக்கு வெண்பட்டு போர்த்துகின்றாய் — குலப்
 பிரிவுக்கு வயப்பட்டே ஆர்த்துகின்றாய்! (நிலத்துக்கு)

பிறருக்கே அறிவுரைகள் கூறுகின்றாய் — அவற்றைப்
 பின்பற்றி வாழ்வோரை நூறுகின்றாய்;
உறவுக்குக் கைநீட்டி ஓடுகின்றாய் — சம
 உரிமைக்கு வழிகாட்டி தேடுகின்றாய்! (நிலத்துக்கு)

விழலுக்குச் செந்நீரை ஊட்டுகின்றாய் — தமிழ்
 விடிவுக்கு நரிக்கொம்பைக் காட்டுகின்றாய்;
நிழலுக்குப் பெரியாரை நாடுகின்றாய் — பிறர்
 நிறைவுக்குக் கடன்பட்டு வாடுகின்றாய்! (நிலத்துக்கு)

மனத்துக்கு மாறாகப் பேசுகின்றாய் — உன்
 மடமைக்குப் பெற்றோரை ஏசுகின்றாய்;
இனத்துக்குப் பகையாக இயங்குகின்றாய் — தமிழ்
 ஈழத்தை மீட்காமல் தயங்குகின்றாய்! (நிலத்துக்கு)

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

முறையில் தேர்ந்த மருத்துவ வல்லுநரால் செய்யப்படவேண்டும், என்பதை நினைவில் வையுங்கள். இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தி அன்புடன் பழகி மன அமைதியுடன் வாழ்ந்தால் மூப்பை வென்று என்றும் இளமையுடன் விளங்கலாம். (முற்றும்)

---

**அன்பர்கள் கவனிக்க....**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

கற்பனை நாடகம்

# நிலவிலே கள்ளன்

— நாடக ஆசிரியர் : அதியமான்

## காட்சி 1

உறுப்பினர்கள் : தேவேந்திரன், தேவர்கள்.
நிலை : தேவேந்திரன் இருக்கையில் அமர்ந்திருக்கிறார். தேவர்கள் பதற்றத்துடன் ஓடிவருகிறார்கள்.

தேவர்கள் : தேவேந்திரா! கள்ளன், கள்ளன், நிலவிலே கள்ளன்!

தேவேந்திரன் : என்ன வியப்பு! நிலவிற்குக் கள்ளன் எப்படி வந்தான்? எங்கிருந்து வந்தான்? மடமை! மடமை!

தேவரில் ஒருவன் : தேவா மடமையில்லை. இ'து உண்மை! எங்கள் கண்ணால் கண்டசெய்தி. பொய்யில்லை, மெய்யே!

தேவே : அளறு (நரகம்) உலகத்திலிருந்து தப்பி எவனாவது நிலவிற்கு வந்திருப்பான், நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

தேவர்களில் ஒருவன் : இல்லவே இல்லை. நீங்கள் சொல்வது போலில்லை. நாங்கள் பார்த்த கள்ளர் நிலஉலகத்திலிருந்து வந்திருக்க வேண்டும்.

தேவே : (சிரிப்பு) தேவர்களே! நிலஉலகத்தில் இருந்து இங்கு யார் வரமுடியும்? மாந்தர்களாய் இருக்கும், என்று நம்புகிறீர்களோ?

தேவர்கள் அனைவரும் : ஆமாம், ஆமாம், அப்படியேதான் நாங்கள் நம்புகிறோம்.

தேவே : அப்படியானால் மாந்தர்கள் போல இருந்தார்களா?

தேவர்களில் ஒருவர் : இருந்தார்கள். ஆனால் முகத்தையும், உடலையும் உறைபோட்டு மறைத்திருந்தார்கள். முகத்தில் முகமூடி அணிந்திருந்தார்கள். எனவே அவர்களை யார் என்று கண்டுகொள்ள முடியவில்லை, தேவா.

தேவே : ஓஃகோ, அப்படியா! ஒன்று செய்வோமா? நாரதரை அழைத்துக் கேட்போம். அவர்தாம் அடிக்கடி மண்ணுலகஞ் சென்று மீளுபவர்.

தேவரில் ஒருவர் : ஆம், ஆம், நல்ல கருத்து! அப்படியே கேட்டுத் தெளிவு பெறலாம்.

தேவே : உங்களில் ஒருவர்போய் நாரதரை நான் அழைப்பதாய்க் கூறி, இங்கு அழைத்து வாருங்கள்.

## காட்சி — 2

உறுப்பினர்கள் : தேவேந்திரன், நாரதர்.
நிலை : (தேவேந்திரர் இருக்கையில் அமர்ந்திருக்கிறார்)

நாரதர் : (வந்து கொண்டே) திருமால்! — திருமால்! (நாராயண், நாராயண)

தேவே : வருக, வருக, நாரதரே! நீண்டநாள்களாக இங்கு உம்மை வரக்காணவில்லை; மண்ணுலகம் சென்றிருந்தீரா?

நாரதர் : தேவருக்கெல்லாம் தேவா. இல்லை நான் இப்போது மண்ணுலகம் செல்வதையே நிறுத்திவிட்டேன்.

தேவே : ஓஃகோ! ஏன்?

நாரதர் : அஃதாவது முன்னால் நம் தேவர்கள் மாந்தர்களாக நிலவுலகத்தில் பிறந்தார்கள். இப்போது அப்படிப் பிறப்பது கிடையாது. நம்மவர்கள் அங்கு மாந்தர்களாய் இருந்தால் தானே எனக்கு அங்கு வரவேற்பு இருக்கும். மேலும் தேவா! மண்ணுலக மக்கள் நாம் இங்கு இருக்கிறோம் என்பதையே கொஞ்சங் கொஞ்சமாக மறந்து வருகிறார்கள்.

தேவே : நாரதரே, நீர் சொல்வதை என்னால் நம்பமுடியவில்லை. இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் என்பெயரால் ஒரு கழகமே உண்டு, தெரியுமா, உமக்கு? எந்த நாட்டுக்காரன் மறந்தாலும் தமிழ்நாட்டுக்காரன் நம்மை மறக்கவே மாட்டான். அவர்கள் நல்லவர்கள்; மேலும் அவர்கள் நம்மவர்கள்!

நாரதர் : அஃதெல்லாம் பெயரளவிற்குத்தான் உம்மீது அன்பு உள்ளவர்கள்தாமா, அவர்கள்? இல்லை,எப்படி என்று சொல்லுகிறேன்; கேளுங்கள். தேவரீர் மண்ணிலத்தில் யார் யாருக்கெல்லாம் சிலை வைக்கிறார்கள். திருவள்ளுவருக்குச் சிலை, கண்ணகிக்குச் சிலை, ஔவையாருக்குச் சிலை சோசப்பெசுக்கிக்கும், போப்புக்கும் கூட சிலை உண்டு, காந்திக்குச் சிலை தெருக்குச் சிலை, உங்களுக்கு ஒரு குட்டிச் சிலைகூட கிடையாது!

தேவே : நமக்குக் கோயில்கள் உண்டு. அங்குச் சிலைகள் உண்டு அவற்றை நீர் பார்க்கவில்லையா?

நாரதர் : அவற்றையெல்லாம், இப்போது திருடிக்கொண்டு போகிறார்கள். அதை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை மண்ணுலகக் காவலர்கள்தாம் தேடி அலைகிறார்கள். ஆகவே நம்மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கைத் தளரத் தொடங்கி விட்டது; அதனால்தான் நான் அப்படிச் சொன்னேன்.

தேவே : அந்தத் திருடர்களைப்பற்றி ஆராயத்தான் உம்மை இங்கு வரவழைத்தேன். நாரதரே நம் தேவர்கள் கூட்டம் நிலவில் கள்ளர் என்று அஞ்சி அனைவரும் இங்கு ஓடிவந்து

அடைக்கலம் ஆகிவிட்டார்கள். நிலவிற்கு வந்த கள்ளர் யார்? என்று உமக்குத் தெரியுமா?

நாரதர் : நிலவுலகத்தில் திருடிய கள்ளர்களே, நிலவிற்கும் வந்திருக்கலாம்.

தேவே : அதை நீர் நம்புகிறீரா?

நாரதர் : நம்பித்தானே ஆகவேண்டும். மண்ணுலகில் உள்ள அமெரிக்கா, உருசியா, போன்ற நாட்டினர், அடிக்கடி அங்காடிக்குப்போய் வருவதைப் போல, நாம் வாழும் விண்ணுலகத்திற்கு வரப்போக இருக்கின்றனர்.

தேவே : அப்படியானால் நாம் அவர்களை இப்படியே விட்டு வைப்பது கடுந்தொல்லையாக முடியும். எனவே, நாரதரே நீர் உடனே மண்ணுலகஞ் சென்று நிலவிற்கு வந்தவர்கள் யார், எனத் தெரிந்து வரவேண்டும்.

நாரதர் : சரி, உங்கள் கட்டளை; நான் வருகிறேன்.

(நாரதர் போய்விடுகிறார்.)

## காட்சி —3

உறுப்பினர்கள் : தேவேந்திரன், நாரதர்.

நிலை : (தேவேந்திரன் இருக்கையில் இருக்க, நாரதர் வருகிறார்.)

நாரதர் : திருமால்! திருமால்!

தேவே : வருக, வருக. நாரதரே உம்வரவு நல்வரவாகட்டும்.

நாரதர் : தேவேந்திரா, எல்லோரும் நலமாக இருக்கிறீர்களா?

தேவே : ஆம், நலமே. நாரதரே, மண்ணுலகஞ் சென்று நிலவிற்கு வந்த கள்ளர் யார் என்று தெரிந்து வந்தீரா?

நாரதர் : ஆம்!

தேவே : எங்கெல்லாம் போனீர். கள்ளர்கள் யார்?

நாரதர் : கள்ளர்கள் வேறுயாரும் இல்லை. மாந்தர்களே!

தேவே : எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?

நாரதர் : மண்ணுலகத்தில் உள்ளவர்கள்தாம்!

தேவே : சரி, சரி. முதலில் எந்த நாட்டிற்குப் போனீர்?

நாரதர் : தேவா, முதலில் இந்தியாவிற்குப் போனேன்.

தேவே : அங்கிருந்துதான் வந்தார்களா?

நாரதர் : இல்லை தேவா இல்லை. இந்தியாவில் உள்ளவர்கள் நமக்குத் தொல்லைதரமாட்டார்கள். அங்கு இன்னும் எத்தனையோ கோவில்களைக் கட்டிக்கொண்டு, குடமுழுக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அடாடா, சே, நம்மீது

என்ன மதிப்பு வைத்திருக்கிறார்கள் தெரியுமா? தாம் பெற்ற குழந்தைகளுக்குக்கூட பால் வாங்கிக் கொடுக்கமாட்டார்கள். ஆனால் நம்மவர் சிலைகளுக்குக் குடங்குடமாகப் பாலை ஊற்றுகிறார்கள். அதுமட்டுமா அவர்கள் ஈட்டும் பொருள்களை நமக்குத்தான் படைக்கிறார்கள். அவர்கள் பட்டினியாக இருந்தாலும் இருப்பார்கள். நமக்குப் படைப்பதில் தவறுவதே கிடையாது.

தேவே : (கையைக்கொட்டி) உம்! அப்படிச்சொல்லும், நாரதரே!

நாரதர் : பொறுங்கள், பொறுங்கள்! இன்னுஞ்சொல்லுகிறேன். அப்படியே நடந்து தமிழ்நாட்டிற்கு வந்தேன். அங்கு கோவில் வழிபாட்டு மொழிகூட நம் மொழி தேவமொழி, சமசுக்கிருதம்தான்.

தேவே : நாரதரே!

நாரதர் : பொறுங்கள். பொறுங்கள். நான்சொல்லி முடிக்கும் வரை, பொறுமையாக இருங்கள். பிறகு பேசுங்கள் தேவா! அவனவன், உயர்வு தாழ்விற்குக் கூட அவனவன் தலைவிதி! என்று இருந்துவிடுகிறார்கள்.

தேவே : அப்படியென்றால்!

நாரதர் : அ'தாவது அங்கு ஒருவன் பிறக்கும் போது, அவனுடையதலையில் அவன் எப்படியெல்லாம் வாழ்வான் என்று நாம் எழுதி விடுகிறோமாம். அதன்படிதான் நடக்கும் என்று நம்பி விட்டார்கள். அதையாராலும் அழித்து எழுதமுடியாது என்று உறுதியாக நம்புகிறார்கள்.

தேவே : என்ன? ஈ.வே.இராசாமி அவர்கள் அப்படி ஓர் எழுத்தும் இல்லை. அதைஎழுதி வைத்தவனும் இல்லை என்று சொல்லி வந்ததாகக் கேள்விப்பட்டேனே!

நாரதர் : அதை அவர் நிலஉலகில் வாழும் போதுதான் சொன்னார். அவர் இங்கே விண்ணுலகம் வந்தபிறகு அங்கு யாரும் அதைப்பற்றிப் பேசுவதே கிடையாது

தேவே : நாரதரே. நீர் தெரியாமல் சொல்லுகிறீர். ஈ.வே.இரா. நம்மைப்பற்றி நன்றாய் ஆய்ந்து பார்த்து விட்டார். நம்மைப் பற்றி நிலஉலகத்தில் உலாவும் வரலாறுகளைப் பொய்யென்று சான்றுகாட்டி மிகுதியான நூல்களை எழுதிவைத்துவிட்டு வந்து விட்டார். அவற்றைப் படித்து விட்டுக் கடவுள்களே இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அ'து உமக்குத் தெரியுமா?

நாரதர் : அதற்கு என்ன காரணம் தெரியுமா தேவா? இந்த மேலுலகத்தைப் பற்றியும், நம்மைப்பற்றியும் மிக அருவருப்பான கதைகளைக் கட்டி ஒட்டி வைத்திருக்கிறார்கள். அறிவு உள்ளவன் அதை எதிர்க்கத்தானே செய்வான்.

தேவே : நாரதரே, நம்மைப்பற்றிய வரலாற்றைப் பரப்புகிறவர்கள் இந்த வரலாறுகள் யாவும் பெருந் தூய்மையானவை. அதை எவரும் எதிர்க்கக் கூடாது என்றும், அஃதாவது அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள், அக் கதைகளை நம்பாவிட்டால் அளறு (நரகம்) கிடைக்கும் என்று சொல்லத்தானே செய்கிறார்கள்.

நாரதர் : தேவர் தலைவரே! இருள் உலகம் (நரகம்) பொன்னுலகம் (மோட்சம்) யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று சரியாக நடத்தும் பொறுப்பு நம்மிடத்தில் இல்லை. கடவுள் இல்லவே இல்லை என்று சொன்ன ஈ.வே.இரா. பொன்னுலகத்தில் அஃதாவது சொர்க்கத்தில் இருக்கிறார். மிகநலமாக அங்கு அவர் இருக்கிறார்.

தேவே : என்ன! ஈ.வே.இரா.விற்கு பொன்னுலகமா! யார் கொடுத்தது?

நாரதர் : யாரும் கொடுக்கவில்லையாம், அவரே நேரே அங்கு போய் இருந்துகொண்டார்.

தேவே : எவ்வளவு துணிச்சல்!! அவரே போய் இருந்து கொண்டாரா!

நாரதர் : தேவேந்திரா! அவரைப்பற்றியச் செய்திகளில் நாம் தலையிட வேண்டாம். பின், அது பெரும் சிக்கலில் கொண்டு போய்விடும்.

தேவே : அதுவும் சரியே, கள்ளனுக்கு வருவோம்!

நாரதர் : தேவேந்திரா, நிலவிற்கு வந்த கள்ளன் இந்தியாவிலிருந்தோ அல்லது தமிழ்நாட்டிலிருந்தோ வரவில்லை. அந்தக் கள்ளன் அமெரிக்காக்காரன்.

தேவே : உப்! அப்படிச் சொல்லும், நான் முன்னமேயே நினைத்தேன்; இந்தியாவில் அந்த அளவிற்கு இன்னும் அறிவு வளரவில்லை என்று. அமெரிக்காக்காரனுக்குத்தான் இங்கு வர வழி காணத்தெரியும். நாரதரே! அப்படியென்றால் நம் தேவர்கள் கள்ளனைக் கண்டதாகக் கூறியது வாய்மையே!

நாரதர் : ஆம், தேவா. நம் தேவர்கள் கண்டது, உண்மை. அதை அவர்கள் சொல்ல வந்தது மெய்ம்மை, சொன்னதும் வாய்மையே.

தேவே : இப்படி நாம் இந்தக்கள்ளர்களை விட்டு வைத்தால் பிறகு எல்லா நாட்டுக்காரர்களும் இங்கு வந்து விடுவார்கள். மேலும் இங்கு அவர்கள் குடியிருக்கத் தொடங்கி விடுவார்கள். இப்போது நிலவுலகத்தில் மக்கள்பிறப்பு கூடுதலாகி, இடநெருக்கடி. இங்கும் அவர்கள் வந்துவிட்டால் அந்த நெருக்கடி இங்கேயும் வளர்ந்துவிடும். இந்தநிலை இந்தியாவில் தான் கூடுதல்! இந்தியர்களே இங்கு வரத்தொடங்குவார்கள்.

நாரதர் : தேவா, அந்தக்கவலை நமக்கு என்றைக்கும் வேண்டாம். இந்தியர்கள் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் அழுது புரண்டாலும் மாண்டவரைத்தவிர மற்றவர் இங்கு வரமாட்டார்கள். அந்த அளவிற்கு அவர்கள் அறிவைப் பெறமாட்டார்கள். இந்த ஈ.வே.இரா போல் ஆயிரம் ஈ.வே.இரா வந்தாலும் அந்தப் பேச்சுகளைக் கேட்கவும் மாட்டார்கள். கேட்டாலும் அவர்கள் அறிவு வேலை செய்யாது. ஆகையால் மற்ற நாட்டுக் காரர்களைப்பற்றித்தான் நாம் கவலைப்படவேண்டும். முதலில் அமெரிக்காக்காரர்களை இங்கு வ ர வி ட ா த ப டி தடுக்க வேண்டும்.

தேவே : நாரதரே. நீர் சொல்வதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இந்தியர் வரமாட்டார்கள். தமிழ்நாட்டுக் காரரைப் பற்றிக் கொஞ்சம் நமக்குக் கவலையாக இருக்கிறது. ஏனென்றால் இந்த ஈ.வே. இரா.தமிழ்நாட்டுக்காரர். அவர் விதைத்த விதை அங்குக் கிடக்கத்தானே செய்யும்.

நாரதர் : அதெல்லாம் அங்கு மட்கிக் கொண்டுவருகிறது. அந்தக் கூட்டம் அவ்வளவாய் இப்போது பணி செய்ய வில்லை; அவர்களுக்குள்ளேயே குத்துவெட்டு; பிரிந்து விட்டார்கள். நாம் கவலைப்படவேண்டியது இப்போதைக்கு அமெரிக்கக் காரர்களைப் பற்றியேதான்.

தேவே : சரி. அப்படியானால் என்ன செய்வோம்?

நாரதர் : அவர்களை இங்கு வரவிடாமல் தடுப்பது நமக்கு இயலாத செயலாயிற்றே!

தேவே : அப்படியானால் என்ன செய்யலாம்! (சற்றுச் சிந்தித்து) நாரதரே இப்படிச் செய்தால் என்ன?

நாரதர் : எப்படி? (தொடரும்)


## "தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ் ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 40 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 25 ,, |
| தனியிதழ் : | 1.25 ,, | 3-00 ,, | 4.00 |

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க!

# செய்திகள்

கடந்த ஆகத்துமாதம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் நெல்லை மாவட்டச்சுற்றுச் செலவை மேற்கொண்டார். அவருடன் அவர் துணைவியார் தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களும் முன்னாள் தென்மொழி அமைச்சர் த. அன்பழகனும் உடன் சென்றிருந்தனர்.

## 1. இராசபாளையம், திருவள்ளுவர் மன்ற நிகழ்ச்சி:

நெல்லைச் செலவின் முதல் நிகழ்ச்சியாக இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற நிகழ்ச்சி கடந்த 5-8-84 அன்று நடந்தது. மன்றம் பாவேந்தர் பாரதிதாசன் விழாவையும், மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவையும் ஒருங்கே கொண்டாடியது விழா. அன்று மாலை 7 மணியளவில், திரு. மறக்கண்ணு நினைவுக்கலையரங்கத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு, கோவில்பட்டி, கோ. வே. நா. கல்லூரிப்பேராசிரியரும், காலஞ்சென்ற நூலகத்துறை பேரறிஞர் அ. திருமலை முத்துசாமி அவர்களின் இளவலும் ஆகிய திரு. அ. சங்கர வள்ளி நாயகம் க. மு. அவர்கள் தலைமையேற்றார்கள். பாவலர் திரு. முத்தரசு அவர்கள் வரவேற்புரை யாற்றினார்கள். இராசுக்கள் கல்லூரி முதல்வர் பர். வேங்கடேசன் க.மு. அவர்கள் தேர்வுகளில் முதலாவதாக வந்த மாணவ, மாணவியர்களுக்கான பரிசுகளை வழங்கினார்கள். இராசபாளையம், அரசினர் மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. செ. வித்வரத்தினம் க.மு. அவர்கள் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

ப. செல்வநாயகனார் அறக்கட்டளைச் சார்பில், அம்மணியம்மாள் பெண்கள் மேனிலைப்பள்ளி மாணவி இ சிவகாமியும், அன்னப்பராசா நினைவு மேனிலைப்பள்ளி மாணவர் சி. குருசேகரனும், 10-ஆம் வகுப்பில் தமிழ்ப்பாடத்தில் முதனிலை பெற்றதற்காகவும்,

அன்னப்பராசா, நினைவுமேனிலைப் பள்ளி மாணவர் கே. காமராசும், ஏ. கா. த. த. பெண்கள் மேனிலைப்பள்ளி மாணவி சி விசயசிரியும், 12-ஆம் வகுப்பில் தமிழ்ப்பாடத்தில் முதனிலை பெற்றதற்காகவும்,

திரு. மறக்கண்ணு அறக்கட்டளைச் சார்பில், பி ஏ. சின்னையராசா மேனிலைப் பள்ளி மாணவர் எசு. பழனிச்சாமியும், அம்மணியம்மாள் பெண்கள் மேனிலைப்பள்ளி மாணவி இ. மங்களசுந்தரியும் 10-ஆம் வகுப்பில் கூடுதல் மொத்த மதிப்பெண் பெற்றதற்காகவும்,

அன்னப்பராசா நினைவு மேனிலைப்பள்ளி மாணவர் எம். சேதுராமலிங்கமும், ஏ. கா. த. த. பெண்கள் மேனிலைப்பள்ளி மாணவி பி.எசு. மகாலட்சுமியும், 12-ஆம் வகுப்பில் கூடுதல் மொத்த மதிப்பெண் பெற்றதற்காகவும்,

பரிசுகள் வழங்கப்பெற்றனர்.

பரிசளிப்பு விழாவிற்குப்பின்னர் உ.த.மு.க. துணைப்பொதுச் செயலர் திரு. இராவணன் அவர்கள் 'பாவேந்தரின் குமுகாயச்

பார்வை' என்னுந் தலைப்பில் அரியதொரு கருத்துரையாற்றினார். அதன் பின்னர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'திருக்குறள் குமுகாயம்' என்னுந் தலைப்பில் 2-30 மணிநேரம் மிகச் சிறந்ததொரு விளக்கவுரையாற்றினார். அவரின் புதிய கருத்துரை போல், இராசபாளையம், திருவள்ளுவர் மன்ற வரலாற்றிலேயே ஒரு சிறப்புரை நிகழ்ந்ததில்லை என்று மன்ற உறுப்பினர்களும் அறிஞர்களும் பேசிப் பெருமிதமுற்றது குறிப்பிடத் தக்கது.

## 2. தளவாய்புரம், அம்மையப்பர் அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி - இலக்கிய மன்ற விழா!

கடந்த 6-8-84 திங்கட்கிழமை காலை 11 மணி அளவில், தளவாய்புரம், பு.மூ.மா. அம்மையப்பர் அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளியின் இலக்கிய மன்றத் தொடக்கவிழா நடைபெற்றது. விழாவிற்குப் பள்ளித் தாளாளர் திரு. பிரபாகரன் தலைமை தாங்கினார். பள்ளித் தலைமையாசிரியை திருவாட்டி சோசபின் தெரேசா ராய் க.மூ. அவர்கள் வரவேற்புரையாற்றினார். அடுத்து திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறிதுநேரம் உரையாற்றியபின் பாவலரேறு அவர்கள், மாணவிகள் மனங்கொள்ளுமாறு ஒன்றேகால் மணிநேரம் இலக்கியச் சிறப்புரையாற்றினார். இறுதியில் திருவாட்டி டி. இராசம்மாள் (தமிழாசிரியை) நன்றியுரையுடன் விழா இனிது முடிந்தது.

## 3. தளவாய்புரம் பு.மூ. மாரிமுத்து ஆண்கள் மேனிலைப்பள்ளி இலக்கியமன்ற விழா :

அன்று பிற்பகல் 4 மணியளவில், தளவாய்புரம் பு. மூ. மாரிமுத்து ஆண்கள் மேனிலைப்பள்ளி, இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி, அப் பள்ளியின் தாளாளர் திரு. அ. இலட்சுமணன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. வி. சு. இராமகிருட்டிணன் க.மு. அவர்கள் வரவேற்புரையாற்றினார். அதன்பின்னர் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களின் உரை நிகழ்ந்தது. இறுதியில் பாவலரேறு அவர்கள் பள்ளியின் ஈராயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் மிக அமைதியாகவிருந்து கேட்குமாறு கருத்துச் செறிந்த அறிவுரையாற்றினார். பள்ளித் தமிழாசிரியர் புலவர் ம. முத்தரசு அவர்களின் நன்றியுரைக்குப்பின், தேநீர் விருந்துடன் விழா இனிது நிறைவுற்றது.

## 4. தளவாய்புரம், பாவேந்தர் பாரதிதாசன் விழாப் பொதுக்கூட்டம்!

6-8-84 திங்களன்று இரவு 9-00 மணியளவில் தளவாய்புரம் மாவட்டக்கிளை நூலக வளர்ச்சிக் குழுவின் சார்பில், ஊராட்சி மன்ற அலுவலகத் திடலில், பாவேந்தர் விழா இனிது கொண்டாடப்பெற்றது. விழாவிற்கு திரு. தமிழ்மணி இராசசாமி தலைமை

தாங்கினார். புலவர் ம. முத்தரசு அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். அடுத்து, அறிவியல் ஆசிரியர் திரு. முத்தையா அவர்களும் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களும் பாவேந்தரின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேசினார்கள். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், பாவேந்தரின் புரட்சிப் பார்வையைத் தெளிவுடன் விளக்கி, 'அவர் காண விரும்பிய குமுகாயம்' என்னுந்தலைப்பில் இரண்டரை மணிநேரம் அரியதோர் உணர்வுரையாற்றினார்கள். நூலகர் நன்றியுரை கூறினார். இரவு 12-30 மணியாகியும் பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் அமைதியாக இருந்து கேட்டது குறிக்கத்தக்கது.

5. இராசபாளையம் மகளிர் மேனிலைப்பள்ளி

கடந்த 7-8-84 செவ்வாய். காலை 10 மணியளவில் இராசபாளையம், தர்மராசா பெண்கள் மேனிலைப்பள்ளியில் பள்ளித் தாளாளர் திரு. தருமகிருட்டிணராசா அவர்களின் தலைமையில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளித்தலைமையாசிரியை திருவாட்டி பிச்சயம்மாள் வரவேற்புரையாற்றினார். அதன்பின் மாணவிகளின் கல்விக் காலக் கடமைகளை வலியுறுத்தி திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் கருத்துரையாற்றினார். அதன்பின்னர் பாவலரேறு அவர்கள் மாணவ மாணவியர்க்கான நல்லுரைகளையும் பெண்கள் விடுதலையையும் வலியுறுத்தி ஒன்றரை மணிநேரம் சிறப்புரையாற்றினார். இறுதியில் தமிழாசிரியை திருவாட்டி தாயம்மாள் அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

6. சத்திரப்பட்டி, அரசினர் மேனிலைப்பள்ளி
இலக்கிய மன்றத் தொடக்கவிழா:

7-8-84 செவ்வாய் பிற்பகல் 4-30 மணியளவில் சத்திரப்பட்டி, அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பாரதி மாணவர் இலக்கிய மன்றத் தொடக்கவிழா நிகழ்ச்சி நடந்தது. விழாவிற்குத் தலைமையாசிரியர் திரு. ந செண்பகம் க.மு. தலைமை தாங்கினார். தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பின் மன்றச் செயலாளர் ஆண்டறிக்கை படித்தார். ஆசிரியர் ஏ. பாலகிருட்டிணன் வரவேற்புரையாற்றினார். தலைமையுரைக்குப்பின் பாவலரேறு அவர்கள் இனியொரு விதி செய்வோம், என்னும் தலைப்பில், நாட்டின் வறுமைநிலையை ஒழிப்பது எவ்வாறு அனைத்து முன்னேற்றங்களுக்கும் அடிப்படையானது; முதாமையானது என்பதுபற்றி மிக விரிவாகவும் விளக்கமாகவும் ஒன்றரை மணிநேரம் சிறப்புரையாற்றினார். இறுதியாக புலவர் முருகக் கடவுள் க.மு. அவர்களின் நன்றியுரைக்குப்பின் விழா இனிது நிறைவுற்றது.

7. மேலவரகுணராமபுரம் திருவள்ளுவர் மன்றப்
பொதுக்கூட்டம் :

7-8-84 செவ்வாய் இரவு 8 மணியளவில், மேலவரகுணராமபுரம், புதுமைப் பூந்திடலில், தலைவர் சீ. துரைப்பாண்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் தமிழ்மணி இராம

சாமி நெடுஞ்சேரலாதன் க.மு. (மாடசாமி), திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் ஆகியோர் கருத்துரைக்குப் பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நீண்டதொரு சிறப்புரை ஆற்றினார். இடையிடையே ஏற்பட்ட காற்றுத் தடையால் மக்கள் சிதறுமல் இருந்ததும், இரவு நீண்டநேரம் தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கு கொண்டதும் குறிப்பிடத்தக்கன. இறுதியில் திரு. த. சின்னத் துரை நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## 8. ஆசிரியர் மன்றம் குரும்பூர்

கடந்த 11-8-84 காலை 10-30 மணியளவில், நெல்லை மாவட்டம், ஆழ்வார் திருநகரி சரகம் சார்பில் ஆசிரியர் மன்றச் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று, குரும்பூர் உயர்நிலைப்பள்ளியில், பள்ளித்துணை ஆய்வாளர் திரு. நவநீத கிருட்டிணன் அறி.இ; ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆழ்வார் திருநகரி ஒன்றியத்தின் உதவிக் கல்வி அலுவலர் திரு. அருணாசலம் அறி. இ; ஆ. ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மன்றச் செயலர் திரு. த. முருகேசன் வரவேற்புரை ஆற்றினார். அடுத்து பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் வழக்கத்திற்கு மேல் நீண்டநேரம் இருந்து மனங்கொள்ளுமாறு சிறப்புரையாற்றினார். இறுதியில் சிறித்தவத் துறவியார் தந்தை. சன்சுவாமி அவர்கள் பாவலரேறு அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தார், இறுதியில் உதவிச்செயலர் திரு சண்முகசுந்தரம் நன்றிகூற, பகல் 1-00 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## 9. செல்வராசு—மகேசுவரி வாழ்க

நிகழும் தி.பி. 2015 மடங்கல் (ஆவணி) மாதம் 14-ஆம்நாள் (30-8-84) வியாழனன்று காலை சென்னை, அகரம், எசு. ஆர். பி, கோவில் சாலையில் உள்ள 'துறையூர் நாடார் சங்க'த் திருமண மண்டபத்தில் நெடுநாளைய தென்மொழி அன்பரும், உ.த.மு.க. தொண்டரும் ஆன திரு கு.சி. செல்வராசு அறி.இ; க.மு. (தமிழ்), க.மு. (ஆங்), க.மு, (குமு), இந்தி(பட்), கல்வெட்டு(பட்) அவர்களுக்கும், நெல்லை, மேலப்புதுக்குடி, சௌந்திரபாண்டியன் அவர்களின் மகள் செல்வி மகேசுவரி அறி.இ.க்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில் திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

திருவாளர் பர். இரா. நாகசாமி க. மு. (இயக்குநர் புதைபொருள், கல்வெட்டு ஆராய்ச்சித்துறை). திருவாட்டி பத்மாவதி க. மு. திருவாட்டி நா. மார்க்சிய காந்தி க. மு; திருவாளர்கள் தென்மொழி ப. முருகவேள் தலைவர் வடசென்னை, உ.த.மு.க. தென்மொழி துரை தென்னவன் (செயலர், தென்சென்னை உ.த.மு.க), குறள்மணி (தலைவர் தென்சென்னை, உ த மு க), பொழிலன் (க.மு) வியனரசு, புட்பராசு (திமுக வட்டத்தலைவர்,) முனுசாமி (திமுக வட்டத்தலைவர்) ஆகியோர் வாழ்த்துரைக்குப் பின், பாவலரேறு அவர்கள், மணமகன் செல்வராசு அவர்களின் சீரிய தமிழ், தமிழின உணர்வையும், கொள்கைப் பற்றையும்,

தொண்டுள்ளத்தையும் பாராட்டி, மிகுவாகப் புகழ்ந்துவிட்டு அரிய கருத்துரைகள் அடங்கிய வாழ்த்துரையை வழங்கினார். இத் திருமணத்திற்கு ஆசிரியரின் குடும்பமே சென்று மகிழ்வூட்டியது குறிப்பிடத்தக்கது. இனிய பகல் விருந்துக்குப்பின் திருமண நிகழ்ச்சி நிறைவெய்தியது.

## 10. கதிரொளி – தனஇலக்குமி வாழ்க!

கடந்த மடங்கல் 24-ஆம் நாள் (9-9-84) ஞாயிறு அன்று, வடவார்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ்நர்மாவில், நீண்டநாளைய தென்மொழி அன்பரும், தனித்தமிழ்ப் பற்றாளரும் ஆகிய புலவர் திரு. வெ. மாசிலாமணி—கிருட்டிணவேணி அவர்களின் திருமகன் செல்வன் மா. கதிரொளி (காவல்துறை, வானொலி இளநிலை ஆய்வாளர்) அவர்களுக்கும், மருதாடு, இராசமாணிக்கம்—செயஇலக்குமி அவர்களின் திருமகள், செல்வி தனஇலக்குமிக்கும், பாவலரேறு அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தேறியது. தொடக்கத்தில் திருவாளர் அ, பு. அறவாழி வந்திருந்தவர்களை வரவேற்று உரையாற்றினார். திருமண நிகழ்வுக்குப் பின்னர், மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள் தருமர், புலவர் இல, வேங்கடேசனார், சீனுவாசலுகுப்தா (ஆய்வாளர் காவல் துறை வானொலிப் பிரிவு), நாகராசன் (காவல் துறை,), புலவர் பூ. பரசுராமன், திரு அ, கண்ணன், புலவர் சி. கோவிந்தசாமி. புலவர் உலகநாதப்பல்லவன் ஆகியோர் நல்லுரை வழங்கினார்கள், இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் மணமக்களை வாழ்த்து முகத்தான், அரியதொரு சிறப்புரையாற்றினார். இறுதியில் புலவர் வெ. மாசிலாமணி நன்றியுரையுடனும் இனிய விருந்துடனும் திருமணம் இனிதே நிறைவுற்றது. பாவலரேறு அவர்களைத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை புலவர் கோ. கணேசன் அவர்கள், துணையாக விருந்து பேணிக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## 11. சென்னை, தொலைக்காட்சியில் தந்தை பெரியார் நிகழ்ச்சி

கடந்த 17-8-84-ஆம்நாள் சென்னை, தொலைக்காட்சியில், மாலை 6 மணியளவில் தந்தை பெரியார் அவர்களின் 106-ஆவது பிறந்தநாள் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவாட்டி சுலோசனை சம்பத் (இயக்குநர், தமிழ்நாட்டுப் பாட நூல் வெளியீட்டு நிறுவனம்), பேரா. இளையநம்பி க.மு செல்வி சபிதா, திருவாட்டி செல்வராசு ஆகியோர் கலந்துகொண்டு தந்தை பெரியாரைப்பற்றிய கருத்துகளையும் அவருடைய கொள்கைகளையும் சிறப்புற எடுத்துரைத்தார்கள். நிறைவுரையாக, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பெண்கள் முன்னேற்றம் பற்றிய ஐயா அவர்களின் கருத்துகளையும் செயற்பாடுகளையும் மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக்கூறி, நிகழ்ச்சியை நிறைவுற முடித்து வைத்தார்கள். o

ஆள்கின்ற, சுரண்டுகின்ற, மக்களை ஒடுக்குகின்ற, மக்களுக்குக் கேடு மட்டுமே புரிந்து மக்களை ஏய்க்கின்ற — சொத்துடைமை வகுப்பின் அப்பட்டமான கைக் கூலிகள் தமிழின் நலத்திற்கும் தமிழர் நலத்திற்கும் ஒருபோதும் துணைவர மாட்டார்கள். இவர்களைத் தோலுரித்துக் காட்டுவது மக்களுக்கு நன்மை புரிவதாகும்.

தங்கள், — இரணியன், கோவை-1.

0: 1029 : பாவலரேறு ஐயா,

வணக்கம். எழுதுவதைவிட, பேசுவதைவிட, செயலே தேவையென்றிருந்தாலும், எழுதாமலும் பேசாமலும் இருக்க முடியவில்லை. தென்மொழி 20 சுவடி 11-இல் கண்ட வெளியான சில செய்திகளைப் படித்துவிட்டு, இதைத் தங்களுக்கு எழுத வேண்டியதாயிற்று. ஏட்டைப்பிரித்ததும் முதல் கட்டுரையைப் படித்ததும், தனித்தமிழ் என்றால் என்ன என்பதைப் புரியாத தமிழர்கள் இருக்கிறார்களே என்று வருந்தவேண்டியுள்ளது.

சித்தலைச் சாத்தனாரைப்பற்றிச் சொன்னது உண்மையோ, பொய்யோ? தெரியவில்லை. என்றாலும் தமிழுக்கு ஊறு நினைத்து உளறுபவர்களைப் பார்த்தால் நாம்தான் மண்டையில் அடித்துக் கொள்ளவேண்டும்.

தனித்தமிழ் என்பது ஏதோ ஒரு புது மொழியை (இந்தியைப் போல) பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்றோர் புகுத்துவதாக் கருதுகிறார்கள். அதனால் தூயதமிழ் என்ற பெயரால் தமிழ் மொழி இழந்த சொற்களை எடுத்துக்காட்டுவது, என்பதைப் புரியாத தமிழர்களை என்னவென்று கூறுவது? தமிழைப்பற்றிப் பேசினால், சிரிக்கிறார்கள், எள்ளுகிறார்கள், இழிவாகத் தமிழையும் பேசுகிறார்கள். தன் தாய்மொழியை இழிவாகக்கருதும் ஓர் இனம் உலகில் தமிழினம் மட்டுந்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(தமிழ்,) மொழி, இனம், நாடு ஆகியவற்றின் அடிமையை மீட்டெடுக்கும் பணியில் இனி எழுதிப் பயன் என்ன? எனவே உ.த.மு.க. செயலில் இறங்கித் தன் நலங்களை நுகர அடிமைகளாக இருப்பவர்களை உணரவைக்காவிட்டால், அவர்களுடைய இன்பத்திற்காகத் தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும், தமிழ் நாட்டையும், அவர்களுடைய அடிமை வாழ்விற்கு உணவாக்கி விடுவார்கள். இஃது உறுதி. — அதியமான், தாழையூற்று.

0: 1030 : பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

தமிழ்ச்சிட்டு சிறுவர்கள் கையில் தவழ்ந்தோட, தென்னகத்தே தோன்றும் தென்மொழியோ உலகெங்கும் வாழும் தமிழரிடம் பறந்தோட, தமிழ்நிலத்தைப் பறிகொடுத்து ஏதும் அறியாதவர்களாயிருக்கும் தமிழர்களை 'இந்நிலம் நம் நிலம்தான்' என உரிமைக் குரல் எழுப்பும் செய்திகள் கொண்ட 'தமிழ்நிலம் சிறந்தோட, வாழ்த்துகிறேன்.

ஈழநாட்டிலிருந்து வரும் தமிழர் துயர் கேட்டு மனம் புண்பட்டுக் கண்ணீர் வடிக்கின்றோம். தம் தாய், தந்தை, உடன்பிறப்புகளின் நிலைகண்ட இளங்காளைகள் வெகுண்டெழுந்து, தமிழரின் உரிமைக்காகப் போராடுகிறார்கள். ஆனால் அவர்களிடம் ஒற்றுமை இல்லாததைக் கண்டு கவலைக்கொள்கிறோம். அவ்விளைஞர்களின் விடுதலை இயக்கங்கள் யாவும் நம் நாட்டு அரசியலை நம்பிக்கொண்டுள்ளன. ஒரு கட்சியில் ஓர் இயக்கம் இருந்தால் அக்கட்சிக்கு எதிராக இன்னொரு கட்சியில் இன்னோர் இயக்கம் இருக்கிறது. முகாமையாக முகுந்தன், பிரபாகரன் தலைமையில்

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் ...

இயங்கும் இயக்கங்கள் ஒன்றுபடவேண்டும். அதற்காக என் கருத்தை நீங்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். அஃதாவது, பிரபாகரன், முகுந்தன் போன்ற இயக்கத் தளபதிகளை ஒன்றாக அழைத்து ஒவ்வோர் இயக்கக் கொள்கைகளையும் பரிமாறிக்கொண்டு, கருத்தாய்ந்து சிறந்த கொள்கைகள் கொண்டு விடுதலைப்புலிகள் இயக்கங்கள் ஓர் இயக்கமாகவே திகழவேண்டும் என்பது என் கருத்து. இதனை உ.த.மு.க. தலைவராகிய நீங்கள் தந்திரமாகச் செயல்படுத்தவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்! — சா. இளங்கோ, வெங்காலூர்

0: 1031 : பேரன்பினிய பேராசான் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, நான் 1967 முதல் தென்மொழி, தமிழ்ச்சிட்டு படித்து வருகிறேன். தமிழ்நிலம் செய்தியிதழும் வாங்கி வருகிறேன். உ.த.மு.க. தொடக்கமாநாட்டிற்கு(சென்னையில் 1981-இல்) உருபா ஒரு நூற்றுஐம் பத்திரண்டு நன்கொடை திரட்டி விடுத்து வைத்தேன். மாநாட்டிற்கும் வந்தேன்.

கடந்த ஆண்டு குளத்தூர் வட்டச்செயலர் திரு. கணேசன் அவர்களும் நானும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் கீரனூர் நூல்நிலையத்திற்கு அஞ்சல் வழி வரவழைத்துப் போட்டோம். தற்போது எனக்குக் கிடைத்த இலவய உறுப்பாண்மையின் கீழ் 'தென்மொழி' இதழ் கீரனூர் நூலகத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. நான் இதுவரை இருபது உறுப்பினர்களைத் 'தென்மொழி' ஆண்டு உறுப்பாண்மையினராக்கியுள்ளேன். தற்போது இருவரோடு 'தமிழ்நிலம்' இதழுக்கு அரையாண்டு உறுப்பினர்களாக நால்வரை ஆக்கியுள்ளேன் 'தமிழ்ச்சிட்'டிற்கு ஏழு உறுப்பினர்களைச் சேர்த்துவைத்துள்ளேன். கூடியவிரைவில் பத்து உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை விடுத்துவைப்பேன்.

ஐயா, எப்படியேனும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களை நடைபோட விடுங்கள். அருள்கனிந்து எங்களை இருளில் ஆழ்த்திவிடாதீர்கள். நன்றி. — கி. பெருமாள், வடக்குப்பட்டி.

0: 1032 : பேரன்பு கெழுமிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம்! தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் தடைப்படும் என்ற செய்தியறிந்து ஆராத்துயர் கொண்டவர்களில் யானும் ஒருவன். அதன் உறுப்பினர்களைப் பெருக்கவேண்டும் என்ற வேண்டுகோளை யான் மேற்கொண்டு முதல் நிலையாக இப்போது, தென்மொழி, தமிழ்ச்சிட்டு 5 இதழ்களைச் சேர்த்துப் பணவிடை செய்துள்ளேன். மேலும் பலஇதழ்களை என் மூலம் அனுப்பிவைக்க அணியம் செய்து வருகிறேன். என் நண்பர்கள் ஆசிரியர்களுக்கு அஞ்சல் மூலமாகவும் நேரிலும் யான் எடுத்துக் கூறிவருகிறேன். தாங்கள் புரியும் தமிழ்ப்பணியை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து தங்கள் வழி ஏற்றால் தமிழன் தலைநிமிர்வான். அக் காலம் வந்தே தீரும். தங்கள் இதழை ஒவ்வொரு தமிழனும் வாங்கிப் படித்துத் தம் அறிவை, உணர்ச்சியைத் தூய்மைப்படுத்திக்கொள்ளவேண்டும். தங்கள் தமிழ்ப்பணி மேன்மேலும் சிறந்து தமிழினம் உய்யவும் தமிழ்ப்பண்பாடு உயரவும் துணையாக இருப்போம் என்பதனை ஆர்வத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்க தங்கள் தொண்டு. — ஆ. பழனியாண்டி, க மு: ஆ.ப, வ: களத்தூர்.

— (தொடர்ச்சி 7-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)